
www.tamilarangam.net

18

August 1994



அ ஆ இ

a aa ie

Tijdschrift voor Tamils in Nederland

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அஆஇ

காலாண்டு இதழ்

சுவடு 18
ஆவணி 1994

வெளியீடு
இலங்கைக் கலாச்சாரக் குழு

A AA IE
Post bus 85326
3508 AH Utrecht
Nederland

படங்கள்
காசிஆனந்தன் கதைகள்,
ராஜா

## உள்ளே

1. சபாலிங்கம் படுகொலை
ஈஸ்வரன்

2. எவடம் எவடம்?
சண்

3. எனது உள்ளங்கையில்...
சோலைக்கிளி

4. அன்னா
தேவா ஹெரால்ட்

5. மனிதஉரிமையும் போராடும் உரிமையும்
சிவசேகரம்

6. பல்லியின் எச்சமாய் நான்
சோலைக்கிளி

7. மனசுக்குள் உக்கார்ந்தபடி
ரவிவர்மன்

8. தொடரும் கருத்தாடல்
திருச்சந்திரன் – சிவசேகரம்

9. பாம்பு நரம்பு மனிதன்
சோலைக்கிளி

www.tamilarangam.net

# பாரிஸில் சபாலிங்கம் படுகொலை



கடந்த மே தினத்தன்று பாரிஸ் நகரில் பிற்பகல் ஒரு மணியளவில் வீட்டுற்குள் வந்த இரண்டு தமிழர்கள் திரு.சபாலிங்கம் அவர்களை அவரது மனைவி குழந்தை முன்னிலையில் சுட்டுக்கொன்றுவிட்டு தொலைபேசி மற்றும் தொடர்புகளையும் துண்டித்துவிட்டு திரும்பிச் சென்றுள்ளனர்.

திரு.சபாலிங்கம் அவர்கள் மனிதநேயம் பேணும் ஒரு விடுதலைப் போராட்டத்தை நேசிப்பவராகவும், ஈழத்து கலை இலக்கியங்களின் பதிப்பாளராகவும் இருந்து வந்தார். ஈழம் சமூக விஞ்ஞானக் கழகம் (ASSEAY) எனும் இடம்பெயர்ந்த தமிழர்களின் வெளியீட்டு நிறுவனத்தின் இயக்குனராக இருந்து, சமகால கவிஞர்களான ஜெயபாலன், சேரன், அருந்ததி, செல்வம், சோலைக்கிளி, ஆகிய கவிஞர்களின் கவிதைத் தொகுதிகளையும், தாரகி அவர்களின் "Eluding Peace" ஈழவிடுதலைப் போராட்டம் பற்றிய பத்தி எழுத்துக்களையும் வெளியிட்டுள்ளார். 'புத்தளம் முஸ்லிம் மக்கள் வரலாறு', இயக்க உட்படுகொலைகளைச் சித்தரிக்கும் 'புதியதோர் உலகம்', இலங்கையில் தடைசெய்யப்பட்ட 1958 கலவரத்தைப் பற்றிய தாச்சிவித்தாச்சி அவர்களின் 'Emergency 58', மற்றும் 'யாழ்ப்பாண



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைபவமாலை' போன்ற நூல்கள் மீண்டும் வடிவம் பெற உழைத்திருக்கிறார். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றிய யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவின் அறிக்கைகளை பிரஞ்சு மொழியில் வெளிக்கொணர்ந்துமுள்ளார். தமிழ்பேசும் மக்கள் தொடர்பான தொல்லியல் ஆவணங்களையும் வரலாற்று நூல்களையும் தொடர்ந்து வெளியிடுவதற்கு விரும்பியிருந்தார். 70களிலிருந்து இன்று வரையான விடுதலைப்போராட்ட வரலாற்றை தகவல்களுடனும், வாக்குமூலங்களுடனும், புகைப்படங்களுடனும் ஆவணப்படுத்தும் பெரும் முயற்சியின் இறுதிக்கட்டத்தில் சபாலிங்கம் அவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இக்கொலைக்கான காரணங்கள் பல்வேறு விதமான வதந்திகளாக பரப்பப்பட்டிருந்தாலும் இக்கொலையானது ஒரு அரசியல் கொலையாகவே கருதவேண்டியுள்ளது. மாற்றுக் கருத்தாளர்களைக் கொல்வது இலங்கை இந்தியாவிற்கப்பால் ஐரோப்பா வரையிலும் வந்திருக்கிறது.

இவ்வகையான கொலைகளால் கொலையாளிகள் சாதிக்கப்போவது எதுமே இல்லை. மாறாக விடுதலைப் போராட்டத்தை பின்னடைய வைப்பது மட்டுமே. இவ்வகையான கொலைகள் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியன. இதைச்செய்பவர்கள், செய்யத்தூண்டுபவர்கள், ஆதரவளிப்பவர்கள் வரலாற்றுக் குருடர்களே. இத்தகைய படுகொலைகளுக்கெதிராக உலகமெங்கும் குரல் எழுப்புவது அவசியமாகும்.

---

## எவடம்? எவடம்?

**— சண் —**

எவடம்? எவடம்?
புளியடி! புளியடி!

எவடம்? எவடம்?
புளியடி! புளியடி!

கண்ணைக் கட்டிக் கூட்டிச்செல்வோர்
கேட்கின்ற கேள்வி
எவடம்? எவடம்?

கட்டுண்டு நடப்பவர்
சொல்கின்ற பதிலோ
புளியடி! புளியடி!

எவடம்? எவடம்?
புளியடி! புளியடி!

விழியடி கட்டி மூடிய பின்னால்
புளியடி என்ன? புற்றடி என்ன?

எவடம்? எவடம்?
புளியடி! புளியடி

www.tamilarangam.net

## சோலைக்கிளி

# எனது உள்ளங்கையில் நான்

என்னை நான்
எனது உள்ளங் கையில் இருத்திவைத்துப்
பார்த்தேன் அழகு

ஒரு மதியத்தில்
கிழுட்டு மரமொன்றின் நிழலின் கீழ்
நான் இருந்தபடி
கையை நீட்டி
எனது உள்ளங்கையில் இருத்திவைத்த என்னை
திடீரெனப் பொத்தினேன்,
உள்ளே அகப்பட்ட நான்
திமிரவில்லை.

எழுந்து
உடைகளைத் தட்டிக்கொண்டு,
என்னை நான்
எனது சட்டைப் பைக்குள் போட்டபடி
இன்னொரு நிழலின்கீழ் சென்றேன்.

அங்கு இருந்து, சட்டைப்பைக்குள்
இருந்த என்னை
நான்
மீண்டும் மற்ற உள்ளங் கையில்
வைக்க எடுத்தேன்;
முன்னர் கையில் இருந்ததை விடவும்
இப்போது கருகிப் பொசுங்கி இருந்ததால்,
அந்த உள்ளங்கையில் இருந்தும் நான்
இருந்ததைப்போல தெரியவே இல்லை.
அவ்வளவு தீ
ஊரில்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மொழிபெயர்ப்புக்கதை



# அன்னா

### தமிழில் தேவா கெரால்ட்

*சிறந்த இலக்கிய கர்த்தாவான Heinrich Boell 1917ல் கொலன்னா (ஜேர்மனி) வில் பிறந்தவர். சர்வகலாசாலைப் படிப்பை முடித்ததும் ஆறு வருடங்கள் யுத்த முனையில் இருந்தவர். 1947லிருந்து நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், வானொலி உரைச்சித்திரங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், கட்டுரைகள் எழுதுவதுடன் ஆங்கில மொழிபெயர்ப்புகளும் செய்துள்ளார். 1972 ல் இவர் இலக்கியத்துக்கான நோபல் பரிசினையும் பெற்றார்*

*மொ.பெ*

1950ம் ஆண்டின் வசந்தகாலத்தில் நான் போர்முனையிலிருந்து வீடு திரும்பினேன். நான் ஊர் திரும்பியபோது எனக்குத்தெரிந்த எவரும் அங்கே இருக்கவில்லை. அதிர்ஷ்டவசமாக என் பெற்றோர் எனக்காகப் பணம் சேர்த்து வைத்துவிட்டிருந்தனர். அந்த ஊரிலே நான் ஒரு அறையை வாடகைக்கு எடுத்தேன். அறையிலே நான் தூங்கிக்கொண்டும், சிகரட் புகைத்துக்கொண்டும், எதற்காகவோ காத்துக்கொண்டிருந்தேன். எனக்கே தெரியாது நான் எதற்கு காத்துக்கொண்ருந்தேன் என்பது. வேலைக்குப் போவது எனக்குப் பிடிக்கவில்லை. நான் விடுதிச் சொந்தக்காரிக்குப் பணம் கொடுத்தேன். அவள் எனக்கு தேவையானவற்றை எல்லாம் வாங்கித்தந்தாள். உணவும் தந்தாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவள் கோப்பியை அல்லது உணவை என் அறைக்கு கொண்டு வரும்போது என்னில் அன்பு கொண்டவளாய் அந்த அறையில் கூடிய நேரம் இருப்பாள். அவளது மகன் கலினோவ் என்ற இடத்தில் நடந்த போரில் இறந்துபோனான். அவள் தான் கொண்டு வந்தவைகளை மேசையில் வைத்துவிட்டு என்னிடம் வருவாள். எனது படுக்கை இருளான இடத்தில் போடப்பட்டிருந்தது. நான் அங்கே தூங்கி வழிந்துகொண்டிருந்தேன். படுக்கையை ஒட்டியிருந்த சுவரிலே நான் தீர்ந்த சிகரட்டுகளை வைத்து அழுத்தியதனால் அங்கே ஒரே கறுப்புத் திட்டுக்கள். அந்த இருள் பகுதியிலே அவள் நின்றபோது, அவள் முகம் வெளிறியும், ஒட்டி உலர்ந்தும் காணப்பட்டபோது எனக்குப் பயமாக இருந்தது. அவளின் பெரிய கண்களும் அதன் பளபளப்பும் முதலில் எனக்கு அவளைப் பைத்தியம் என நினைக்க வைத்தது. அத்துடன் அவள் தன் மகனைப்பற்றி என்னிடம் இப்படி அடிக்கடி கேட்பாள்.

"உங்களுக்கு அவனைப்பற்றி தெரிந்திருக்கவில்லை என்கிற விடையம் என்பது நிச்சயமானதா? அந்த ஊரின் பெயர் கலினோவ்கா. அந்த ஊரில் நீங்கள் இருந்திருக்கவில்லையா?"

ஆனால் நான் கலினோவ்கா என்ற பெயர் கொண்ட ஒரு ஊர் பற்றி கேள்விப்பட்டதே இல்லை. ஒவ்வோர் தடவையும் இப்படி அவள் என்னைக் கேட்கும்போது நான் சுவர்ப்பக்கம் திரும்பி,

"இல்லை, உண்மையிலே தெரியாது. எனக்கு இப்படி ஒரு பெயர் ஞாபகத்திலும் இல்லை." என்பேன்.

எனது விடுதிச்சொந்தக்காரி பைத்தியம் இல்லை. அவள் தனது கடமைகளை ஒழுங்காகச் செய்யும் ஒரு பெண். அவள் இப்படிக் கேட்கும் போது என் மனது வலித்தது. ஒவ்வொரு நாளும் நான் அவள் குசினிக்குப் போக நேரும்போது, அவள் இந்தக் கேள்வியைக் கேட்பாள். அத்துடன் அங்கே சோபாவுக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த அவள் மகனின் கலர் போட்டோவையும் நான் பார்க்கவேண்டியதாகும். அந்தப் போட்டோவில் அவன் முன்னணிப் படைவீரன் உடையுடன் தங்கநிற முடி கொண்டவனாய்ச் சிரித்துக் கொண்டிருந்தான்.

"இந்தப் படம் காறினிசோனிலிருந்து படை வீரர்கள் நகருமுன் எடுக்கப்பட்டது." விளக்கினாள் வீட்டுச் சொந்தக்காரி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்த மார்பளவு படத்திலே அவன் இரும்புத் தொப்பி அணிந்திருந்தான். பின்னணியில் செயற்கையாய் படரவிட்ட திராட்சைக் கொடியுடன் கூடிய சிறிய அரண்மனை காணப்பட்டது.

"அவன் டிராம் வண்டியோட்டியாக இருந்தவன். சுறுசுறுப்பான பையன்." என்றாள் என் விடுதிச் சொந்தக்காரி.

மேலும் அவள் தனது தையல் சாமான்களுக்கு இடையில் இருந்த ஒரு அட்டைப்பெட்டி நிறைய உள்ள போட்டோக்களை வெளியே எடுத்தாள். நான் அவள் மகனின் எல்லாப் போட்டோக்களையும் பார்க்கவேண்டியிருந்தது. பாடசாலையில் எடுக்கப்பட்ட குறூப் போட்டோக்களில் நடுநாயகமாக அமர்ந்திருந்த அவன் முழங்கால்களுக்கிடையில் இடுக்கப்பட்ட கற்பலகையில் 6, 7, 8 என எழுதப்பட்டிருந்தது.

---

## தீர்க்கப்படுமாம்?

இலங்கையில் பதினேழு வருடகால யு.என்.பி ஆட்சிக்குப்பின் மீண்டும் பாராளுமன்றம் மாறியிருக்கிறது. புதிய பிரதமரான சந்திரிகா, லஞ்சமும் ஊழலும் ஒழிக்கப்படுமென்றும், தேசிய இனப்பிரச்சனை தீர்க்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார். இதுவரை மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தேர்தல் வாக்குறுதிகளைக் காற்றோடு போகவிட்டதும், தேசிய சிறுபான்மை மக்கள் மீது யுத்தத்தைக் கொண்டுவந்ததும், சாதாரண மக்கள் மீது வாழ்க்கைச் சுமைகளையும் ஏற்றியதுதான் கண்ட மிச்சமாகவுள்ளது. புதிய பிரதமரும் அமைச்சர்களும் என்னதான் புதிதாய் செய்துவிட இருக்கிறது? 'சகல அதிகாரமும் கொண்ட ஜனாதிபதி ஆட்சிக்குக்கீழ் எம்மால் எதுவும் செய்துவிட முடியாது' என்ற சாட்டுக்களுடன் எதிர்காலம் கடத்தப்படக்கூடும். தமிழர் பிரச்சனையை பேசித்தீர்த்துக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறார். ஏசித்தீர்க்காமலும் குண்டுகளை ஏவித்தீர்க்காமலும் இருப்பார்களேயானால் அதுவும் கொஞ்சம் நிம்மதிதான்

ஐரோப்பியப் பத்திரிகைகள், இலங்கையில் பிரச்சனை தீர்க்கப்பட்டு விட்டதாகவும், பிரதமர் நம்பிக்கைக்குரிய பணிகளில் ஈடுபடுவதாகவும் எழுதிக்கொண்டிருக்கின்றன. இவற்றைச்சாட்டாக வைத்து ஐரோப்பிய அரசுகள் இலங்கை அகதிகளைத் திருப்பியனுப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம் என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாய் உள்ளது. ஈஸ்வரன்.

www.tamilarangam.net

விஷேசமாக சிவப்பு நாடாவினால் சுற்றிக் கட்டப்பட்ட புதுநன்மை பெற்ற போட்டோ ஒன்று.
புன்னகையுடன் கூடிய அவன் நேர்த்தியான ஆடை அணிந்திருந்தான். கையில் மெழுகுவர்த்தியுடன் நின்றிருந்த அவனின் பின்னால் தங்கப் பேழை வரையப்பட்டிருந்தது திரைக்கூடாகத் தெரிந்தது.
இன்னும் சில போட்டோக்களில் அவன் ஒரு மெக்கானிக்காக அமைதியான முகத்தோடு பயிற்சிக் கூடமொன்றில் காணப்பட்டான்.

"இந்த வேலை அவனுக்கு ஏற்ற தொழில் இல்லை. அது சரியான கஷ்டமான வேலை" சொன்னாள் விடுதிச் சொந்தக்காரி.

அவள் எனக்குக் கடைசியாக ஒரு போட்டோவைக் காட்டினாள். அந்தப் போட்டோ அவன் படை வீரனாவதற்கு முன் எடுத்தது. அதிலே அவன் 9வது டிராம் வண்டியின் முன்னால் சீருடையில் நின்றிருந்தான். அந்த இடம் வண்டி சுற்றி வட்டம் அடித்து நிற்கும் கடைசித் தரிப்பிடம் என்பதும், போருக்கு முன்னர், அதில் தெரிந்த கடையில் நான் சிகரட்டுகள் வாங்கியதும் நினைவுக்கு வந்தது. போட்டோவிலே காணப்பட்ட மரங்கள் இன்னும் அங்கே நிற்கின்றன. ஆனால் முன்னர் அங்கு இருந்த சிங்கமுகப்பு வாயிலைக்கொண்ட மாளிகை இப்போது இல்லை.

மேலும் அந்தப் போட்டோவிலிருந்த ஒரு பெண்ணைப் பற்றி சிந்தனை எழுந்தது. இவள் பற்றி நான் போர்முனையிலிருந்தபோது அடிக்கடி யோசித்திருக்கிறேன். அவள் அழகானவளாய் இருந்தாள். வெளுத்திருந்த அவள், சிறிய கண்களைக் கொண்டிருந்தாள். அந்த கடைசித் தரிப்பிடத்திலேதான் அவள் வண்டியில் ஏறுவாள்.

ஒவ்வொரு தடவையும் என் விடுதிச்சொந்தக்காரி தன் மகனின் 9வது டிராம் வண்டியின் போட்டோவைக்காட்டும்போது, நீண்ட நேரமாக நான் அதனைக்கூர்ந்து பார்த்து, பலவற்றையும் சிந்தித்தேன். சவர்க்காரத் தொழிற்சாலையில் வேலைபார்த்த அந்தப் பெண்ணைப்பற்றி, கோடையில் அந்தப்பானக்கடையில் வாங்கிக் குடித்த சிவப்புப் பானம் பற்றி, பச்சை நிற சிகரட் விளம்பரம் பற்றி, மீண்டும் அந்தப் பெண்பற்றி....."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சிலவேளை, நீங்கள் அவனைக் கண்டிருப்பீர்கள்"
சொன்னாள் வீட்டுச்சொந்தக்காரி.

நான் தலையசைத்து மறுத்தேன். அந்தப்போட்டோவை மீண்டும் அட்டைப்பெட்டியுள் வைத்தேன். அந்தப்படம் எட்டு வருடங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்டிருந்தாலும் புதிதுபோல் மினுமினுத்தது.

"இல்லை, இல்லை, உண்மையிலே எனக்கு காலினோவ்காவை தெரியாது."
நான் அடிக்கடி அவள் குசினிக்குப் போகவேண்டியிருந்தது. அவளும் என் அறைக்கு அடிக்கடி வந்தாள். நாள் முழுக்க நான் போரைப்பற்றி மறக்க முயற்சித்தேன். என் படுக்கைக்கு பின்னால் சிகரட்துாள்களை தட்டினேன். எரிந்த சிகரட்டுக்களை சுவரிலே அழுத்தி அணைத்தேன்.

மாலை வேளைகளில் நான் என் ரூமிலே சும்மா படுத்துக்கொண்டிருக்கும்போது, சில சமயங்களிலே நான் என் பக்கத்து ரூமில் ஒரு பெண்ணின் காலடியோசைகளை அல்லது குசினிக்குப்பக்கத்தில் உள்ள ரூமில் இருந்த அந்த யுகோஸ்லாவியன் தன் ரூமுக்குள் போவதற்கு முன் மின்விசை தேடி எரிச்சல்படும் துாஷண வார்த்தைகளைக் கேட்க முடிந்தது.

நான் மூன்று கிழமைகளாக அங்கு இருந்தபோது, ஐம்பதாவது தடவையாக கார்ல் (வீ.சொ.மகனின் படத்தை) கையில் எடுத்தேன். சிரித்த முகத்தோடு டிராம் வண்டியின் முன்னால் நின்றிருந்த அவனிடமிருந்த பணம் சேகரிக்கும் பை தடிப்பாய் தெரிந்தது. நான் அப்படத்தை முதல் முறையாகக் கூர்ந்து கவனித்தேன். வண்டியின் உள்ளே சிரித்தவாறு இருந்த அந்தப் பெண்ணும் படம் பிடிக்கப்பட்டு இருந்தாள். இந்த அழகான பெண்ணைப்பற்றித்தான் நான் போர்முனையில் இருந்தபோது அடிக்கடி நினைத்தேன். வீ.சொ.என்னிடம் வந்து, என் முகத்தைக் கூர்ந்து கவனித்தவள் என்னைப்பார்த்து,

"இப்போது உங்களுக்கு அவனை ஞாபகம் வருகிறதா?" என்று கேட்டாள்.
பின்னர் அவள் எனக்குப்பின்னால் வந்து நின்றுகொண்டு, என்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோள்களுக்கு மேலால் அப்படத்தைக் கவனித்தாள். அவள் ஆடையிலிருந்து வந்த கடலை மணம் என் முதுகின் மேலே மிதந்து வந்தது.

"இல்லை." என்று பதில் சொன்ன நான் , "ஆனால் இந்த பெண்....
இந்தப் பெண்..." என்றேன்.

"இவள் என் மகனை மணமுடிக்க இருந்தவள். ஆனால் அவளைப் பார்க்க முடியாமல் இருப்பதும் நல்லதுதான்" என்றாள் அவள்.

அவள் என்னை விட்டு விலகிப் போய் எனக்குரிய பதிலும் சொல்லாமல் தன் இருப்பிடத்தில் போய் இருந்து கொண்டு தொடர்ந்து என்னைப்பார்க்காமலே கடலை உரிக்கத்தொடங்கினாள்.

"அவளை உங்களுக்குத் தெரிந்திருந்ததா?" கேட்டாள் அவள்.

நான் அந்தப் படத்தை கையில் வைத்துக்கொண்டே வீ.சொ.யைப் பார்த்து 9 வது நம்பர் வண்டியின் கடைசித்தரிப்பிடம், இவ்விடத்தில் அப்பெண் வண்டியில் ஏறியது, சவர்க்காரத்தொழிற்சாலை, போன்றவற்றை விபரித்தேன்.
"வேறொன்றுமில்லையா?"
"இல்லை" என்ற நான் கடலைகளை கழுவிக் கொண்டிருந்த அவளின் மெலிந்த பின் புறத்தையே பார்க்க முடிந்தது.

"நீங்கள் மீண்டும் அவளைச் சந்திக்க நேர்ந்தால் புரிந்துகொள்வீர்கள். அவன் அவளை பார்க்காமல் போனது எவ்வளவு நல்லது என்று."
மீண்டும் சந்திக்க..."

அவள் தன் கைகளை தன் ஆடையில் துடைத்துக்கொண்டே என்னிடம் வந்து என்னிடமிருந்து அந்த போட்டோவை வாங்கிக் கவனித்தாள். அப்போது அவள் முகம் இன்னும் சிறுத்தது. என் கண்களை அவள் கண்கள் மேலோட்டமாய் பார்த்தன.தன் கையை எனது இடது தோளில் வைத்த அவள், "அவள் உங்கள் அறைக்குப் பக்கத்து அறையில் தான் இருக்கிறாள். அவள் பெயர் அன்னா. அவள் வெளுத்த முகம் கொண்டவளாதலால், அவளை நாங்கள் எப்போதும் வெளுத்த அன்னா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றே அழைப்போம். உண்மையிலேயே நீங்கள் அவளை இன்னும் காணவில்லையா?"

"இல்லை. நான் இன்னும் அவளைக் காணவில்லை. எனினும் சில தடவைகள் சத்தத்தை கேட்டிருக்கிறேன். அவளுக்கு என்ன நடந்தது?"

"எனக்கு அதைச் சொல்ல விருப்பமில்லை. என்றாலும் உங்களுக்கு அது தெரிந்திருப்பது நல்லது. அவளது முகம் வடுக்களால் சிதைக்கப்பட்டிருக்கிறது. அவள் ஒரு விமானத் தாக்குதலின்போது கடை ஜன்னலுக்கூடாக வெளியே எறியப்பட்டிருக்கிறாள். அவளை நீங்கள் மீண்டும் இனம் காணமுடியாது."

அன்று மாலை நான் நடையிலே காலடிச்சத்தம் கேட்கும்வரை காத்திருந்தேன். ஆனால் முதல் முறை எனக்கு ஏமாற்றமாயிருந்தது. சடுதியாக அங்கு வந்த என்னை அந்த யுகோஸிலாவியன் ஆச்சரியமாகப் பார்த்தான். நான் அவனுக்கு நிதானமாக மாலை வணக்கம் சொல்லி என் அறைக்கு மீண்டேன்.

நான் அவள் வடுக்களாலான முகத்தைப் பற்றி யோசித்துப்பார்த்தேன். ஆனால் மீண்டும் மீண்டும் எனக்கு அவளின் அழகிய முகம் வடுக்களோடு சிந்தனைக்கு வந்தது. நான் சவர்க்காரத் தொழிற்சாலை பற்றி, என் பெற்றோர் பற்றி, இன்னோர் பெண்ணோடு முன்னர் திரிந்தது பற்றி... யோசித்தேன்.

அவள் பெயர் எலிஸபெத். ஆனால் நான் அவளை செல்லப்பெயரால் அழைப்பதை விரும்பினாள். நான் அவளை முத்தமிட்டபோது. அவள் சிரித்தது எனக்கு முட்டாள்தனமாகப்பட்டது. போர்முனையில் நான் இருந்தபோது, அவளுக்கு நான் போஸ்ட்காட்டுகள் எழுதினேன். அவள் எனக்கு தானே தயாரித்த பிஸ்கட்டுகளை அனுப்பினாள். அவைகள் எனக்கு வந்து சேர்ந்தபோது அவ்வளவும் நொருங்கியிருந்தன. அவள் சிகரட்டுகளையும், பத்திரிகைகளையும் எனக்கு அனுப்பி, ஒருதடவை கடிதத்தில் இப்படி குறிப்பிட்டு எழுதியிருந்தாள்: "நீங்கள் என்றைக்காவது வெல்லுவீர்கள். நீங்கள் அங்கு போரில் ஈடுபடுவது பற்றி நான் மிகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெருமையடைகிறேன்." என்று. ஆனால் போர்முனையில் நான் இருப்பது பற்றி ஒரு போதும் பெருமையடைந்தது இல்லை. எனக்கு விடுமுறை கிடைத்தபோது, அது பற்றி நான் அவளுக்கு சொல்லவில்லை. இச்சமயத்திலே நான், எங்கள் வீட்டின் மற்றொரு போர்ஷனிலிருந்த புகையிலைக் கடைக்காரனின் மகளோடு தொடர்பு வைத்திருந்தேன். இவள் எனக்கு சிகரட்டுகள் தந்தாள். நான் அவளுக்கு என் தொழிற்சாலையிலிருந்து சோப்புகள் வாங்கிக் கொடுத்தேன். நாங்கள் நடனம் ஆடவும், சினிமாவுக்கும் போனோம். ஒரு முறை அவள், தன் பெற்றோர் வீட்டில் இல்லாத சமயம் தன் அறைக்கு என்னை அழைத்துச் சென்றாள். இருளான அந்த அறையிலே, சோபாவிலே அமர்ந்திருந்த அவளை நான் அணைத்தேன். ஆனால் நான் அவளை சாய்வித்தபோது, அவள் தந்திரமாக சிரித்தபடி மின்விசையைத் தட்டினாள். வெளிச்சம் பரவியபோது நான் சுவரிலே ஹட்லரின் படமொன்று தொங்கிக் கொண்டிருப்பதை கண்டேன். ரோஸ் நிற சுவர்ப்பேப்பர் ஒட்டப்பட்டிருந்த சுவரிலே இருந்த அந்த கலர் போட்டோவைச் சுற்றி இதய வடிவில் விறைப்பான ஆண் முகங்களைக் கொண்ட போட்டோக்கள் அலங்கரித்தன. இரும்புத் தொப்பி அணிந்த இந்த எல்லா ஆண் முகங்களும் சஞ்சிகைகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டிருந்தன. தபால் அட்டைகளும் அங்கே ஆணிகளால் அழுத்தப்பட்டு இருந்தன. நான் அவளை அப்படியே கிடக்க விட்டுவிட்டு சிகரட் ஒன்றை வாயில் திணித்தபடி அங்கிருந்து வெளியேறினேன்.

பின்னர் இந்த இரு பெண்களும் நான் போர்முனையில் இருந்தபோது எனக்கு, நான் அநாகரிகமாக நடந்துகொண்டதாக கடிதங்களில் எழுதினார்கள். ஆனால் நான் அவர்களுக்கு பதில் எழுதவில்லை....

இப்போது நான் அன்னாவுக்காக காத்திருந்தேன் நிறைய சிகரட்டுகள் ஊதினேன். நிறைய யோசித்தேன். இருளிலே சாவி போட்டுத் திறக்கும் சத்தம் கேட்டபோது, எழுந்து சென்று அவள் முகத்தைப்பார்க்க எனக்கு பயம் ஏற்பட்டது. அவள்கதவைத் திறந்து உள்ளே போய் தெளிவில்லாத பாட்டொன்றைப் பாடியபடி அங்குமிங்கும் நடப்பது எனக்கு கேட்டது. நான் எழுந்திருந்து நடைபாதையில் காத்திருந்தேன்.

திடீரென அவள் அறையில் நிசப்தம். அவள் பாட்டு பாடவில்லை. அங்குமிங்கும் நடக்கவில்லை. எனக்கு அவள் கதவை தட்ட பயமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தது.
அந்த யுகோஸிலாவியன் ஏதோ முணுமுணுத்துக்கொண்டே தன் அறையினுள் போவதும் வருவதும் எனக்கு கேட்டது.
விடுதிச் சொந்தக்காரியின் குசினியில் குழாயிலிருந்து நீர் சொட்டுவது கேட்டது.
அன்னாவின் ரூமில் நிசப்தம்.
நான் இங்கிருந்து என் ரூமைப் பார்க்கையில் சுவர் பேப்பரிலே நான் படுத்தியிருந்த சிகரட் கறைகள் தெரிந்தன. யுகோஸிலாவியன் படுத்திருப்பான் போலும். அவன் முணுமுணுப்பும் இல்லை. நடக்கும் சத்தமும் இல்லை. விடுதிச் சொந்தக்காரியின் குசினியில் குழாயிலிருந்து நீர் சொட்டுவதும் இல்லை. ஆனால் விடுதிச் சொந்தக்காரி கோப்பிக் கேத்தலின் மூடியை மூடுவது கேட்டது.
அன்னாவின் அறையில் இன்னும் நிசப்தம்.
நான் திடீரென யோசித்தேன், நான் அவள் அறையின் முன்னால் நின்றபோது "அவள் என்ன நினைத்தாள்" என்பதை அவள் பின்பு எனக்கு சொல்வாள் என்று. அவளும் அதனை எனக்கு பின்னர் சொன்னாள்.
நான் கதவு நிலைக்குப்பக்கத்தில் மாட்டப்பட்டிருந்த ஒரு படத்தை கூர்ந்து கவனித்தேன்: அதிலே, வெள்ளியாய் மினுமினுத்துக் கொண்டிருந்த ஒரு குளத்திலே இருந்து நனைந்த தங்கநிற தலைமயிரோடு ஒரு நீர்த்தேவதை தோன்றினாள். அவள் பசுமையான பற்றைகளுக்கிடையில் ஒளிந்துகொண்டிருந்த அந்தக் கிராமத்துப் பையனைப்பார்த்து புன்னகைத்தாள். என்னால் அத்தேவதையின் அரைவாசி இடமார்பகத்தையே காணமுடிந்தது. அத்தோடு அவளின் கழுத்து வெள்ளையாயும், சற்று நீளமாயும் இருந்தது.
எனக்குத்தெரியாது நான் எப்போது அவள் அறைக்கதவின் அழுத்து மணியை அழுத்தினேன் என்று. நான் மணியை அழுத்தமுனைந்தபோது, கதவு மெதுவாக திறந்தது. இந்த சமயம் நான் அன்னாவை வென்றுவிட்டேன் என்பது எனக்கு புரிந்தது. அவளது முகம் முழுவதும் நீலமான வடுக்களால் நிறைந்திருந்தது. அறையிலே காளான் மணம். அவைகள் வாணலியில் வதங்கிக்கொண்டிருந்தன. நான் அறைக்கதவை நன்றாக திறந்தேன். எனது கரங்களை அவளின் தோள்களில் வைத்தேன். அவளை நோக்கி புன்னகைக்க முயன்றேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனித உரிமையும் போராடும் உரிமையும்

சி.சிவசேகரம்

1. மேலை நாடுகளில் மனித உரிமை பற்றி நிறையப் பேசப்படுகிறது. இந்த விதமான அக்கறை எப்போதுமே ஒரு முழுமையான உலகு தழுவிய பார்வையினின்று எழுவதல்ல. மனித உரிமை என்றால் என்ன என்பது பற்றிய அடிப்படையான கருத்து வேறுபாடுகள் உள்ளன. மனித சமுதாயங்களின் அமைப்பில் உள்ள வேறுபாடுகள், மத நம்பிக்கைகள், மரபுகள் போன்ற உட்காரணிகளும் சமுதாயங்கட்கிடையிலான உறவுகள், போர், பஞ்சம் போன்ற வெளிக்காரணிகளும் மனித உரிமை பற்றிய நமது மதிப்பீடுகளைப் பாதிக்கின்றன.

வெவ்வேறு சமுதாய அமைப்புக்கட்குப் பொதுவான முழுமையான மனித உரிமை விதிமுறைகளென எவையுமில்லை. ஆயினும் சில அடிப்படையான நெறிகளை நாம் அடையாளங்காண இடமுண்டு. மனித உரிமை பற்றிய பிரச்சனை மனித உறவுகளின் அடிப்படையில் எழுவது. மனித சமத்துவத்தை ஏற்காத சமுதாயப் பார்வைகளையுடையோர் மனிதர் அனைவர்க்கும் பொதுவான மனித உரிமைகள் பற்றிப் பேசுவது தன்னுள் முரண்பாடானது. மனித சமத்துவமற்ற எந்தவொரு சமுதாயத்திலும் மனித உரிமைகளின் மீறல் தவிர்க்கவியலாதது. இந்த மீறல்கள் சமுதாயங்களின் பொருளாதார நிலைமைகளையொட்டியும் அரசியல், சமுதாய அமைப்புக்களையொட்டியும் வேறுபடலாம். ஆயினும் மனிதரை மனிதர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுரண்டுவதை ஸ்தாபனரீதியாக ஏற்கும் எந்த ஒரு சமுதாய அமைப்பும் அரசும் மனித உரிமை மீறல்களை எவ்வகையிலோ ஆதரித்தே நிற்கிறது.

மனித சமுதாயம் மனிதரிடையே ஏற்றத்தாழ்வு காரணமாகவும் மனிதரை மனிதர் ஒடுக்கும் தேவை காரணமாகவும் பலவகைகளிலும் பிளவுண்டுள்ளது. அதன் விளைவாக ஒடுக்குதலுக்கான கருவிகள் சமுதாய அமைப்பில் ஒரு பகுதியாகி விடுகின்றன. வரலாற்றில், அரசு என்பது ஒடுக்குதலுக்கான ஒரு இயந்திரமாகவே செயற்பட்டு வந்துள்ளது என்பதை மார்க்ஸ், லெனின் ஆகியோர் தெளிவுபடுத்தியுள்ளனர். இத்தகைய ஒடுக்குதல் இல்லாத சமுதாயப் பிரிவுகட்கு மத்தியிலான போராட்டம் தொடரும். மனிதர் உழைப்பை உறிஞ்சுவோர் தாமாகவே தம் நலன்களை விட்டுக் கொடுத்ததாக வரலாறு இல்லை. எனவே அரசு என்பது மனித சமத்துவத்துக்காகச் செயற்படும் சமுதாயங்களிலும் அவசியமாகிறது. இது, அச் சமுதாயங்களிற் புதிய முரண்பாடுகட்குக் காரணமாகிறது.

மேலை முதலாளித்துவ நாடுகள் தமது அரசியல், பொருளாதார

---

## பல்லியின் எச்சமாய் நான்

என்னை விழுங்கியது பல்லி.
நான் அதன் வயிற்றுக்குள் இருந்தேன்.
இன்னும் சில நாளில் அது இட இருந்த முட்டை
என் பக்கத்தில்
இருந்தது.

என்னை விழுங்கிச் சுமந்தபடியே ஏறியது
சுவரின் உச்சிக்கு
அப் பல்லி.
இடையில் இன்னொரு கொசுவையும் விழுங்கியது.

நான் இன்று
மிகவும் சிறுத்திருந்தேன்,
ஏன்?
இன்று நான் அவனுடன் கதைத்திருந்தபோது
சாடையாய் ஊர்வாகும் என்வாயால்

www.tamilarangam.net

நலன்கட்கு மாறாக உள்ள நாடுகளில் உள்ள மனித உரிமை மீறல்கள் பற்றி மிகவும் பேசுவதுண்டு. அதே விதமான மீறல்களும் அவற்றினும் மோசமான மீறல்களும் நிகழும் நாடுகளின் அரசுகள் தமக்கு இசைவாக உள்ளபோது மனிதஉரிமையென்ற பிரச்சனையே எழுவதில்லை. மொத்தத்தில் மனித உரிமை என்பது பிறநாடுகளின் உள்விவகாரங்களிற் தலையிடுவதற்கான ஒரு வசதியாகவே இவர்களாற் பயன்படுத்தப்படுகிறது. மனித உரிமை தொடர்பாகச் சில மனித உரிமை நிறுவனங்கள் எழுப்பும் கேள்விகள் சில சமயம் மேலை முதலாளித்துவ அரசாங்கங்கட்குச் சங்கடத்தை ஏற்படுத்துவது உண்மை. அரசாங்கங்களின் நடைமுறை மீது இதன் பாதிப்பு அதிகமில்லையாயினும் மக்களின் அரசியல் விழிப்புணர்விற்கு இக் கேள்விகள் உதவுவது ஒரு நல்ல அம்சம். மறுபுறம், ஜனநாயகம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் மேலைநாடுகளின் கோட்பாடுகளைத் தழுவி அவை சார்ந்த விழுமியங்களை மூன்றாமுலக நாடுகள் மீது திணிக்கும் ஒரு போக்கும் உள்ளது. இது பற்றி நாம் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

---

வழியத் தொடங்கியதே
அதை நினைத்து!

என் பல்லி என்னைச்
சமிபாடடையச் செய்வதற்காய்,
ஏறிப்போய் ஒரு வசதியான விழிம்பில்
படுத்துக்கொண்டது.
அதன் வயிற்றுக்குள் சரியான இரைச்சல்.
இட இருக்கும் முட்டைக்குள்
உயிரேறிக் கொண்டிருக்கும் கருவின் சத்தமும்
என் காதுக்குக் கேட்டு,
பின் நான்
சமிக்கச் சமிக்க
மறைந்துகொண்டே போனது.

அதிகாலையில் நான் கிடந்தேன்,
நேற்று நான் எழுதி மடித்துவைத்த தாளில்
பல்லியின் எச்சமாய்
மேசையில்.

சோலைக்கிளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2.மேற் குறிப்பிட்டவிதமாக மனித உரிமை பற்றிய பொதுவான விதிகள் இல்லாமையால், மூன்றாமுலக நாடுகளில் மனித உரிமைகள் பற்றிய பிரச்சனையே இல்லை என்றோ அவ்வாறு இருந்தாலும் அவை பற்றி யாரும் எதுவும் செய்ய இயலாது என்றோ நாம் கூறுவதற்கில்லை. ஒரு சமுதாயத்தின் சட்ட திட்டங்களை மாற்றும் உரிமையும் அதன் செய் நெறியை மாற்றும் உரிமையும் அச் சமுதாயத்தின் மக்களுக்கே உரியது. அவர்களது ஜனநாயக உரிமைக்கும் மேலாக, வேறெவரும் அவ்விதமான விஷயங்களிற் குறுக்கிடுவது தவறானது.

மனித உரிமையின் பேரால் அயல் நாடுகளின் தலையீடு நடந்த சம்பவங்கள் பலவற்றை அறிவோம். இவை பெரும்பாலும் குறுக்கிடும் நாடுகளின் சொந்த நலனுக்காகவே நிகழ்ந்தவை. இவற்றின் விளைவாக, ஒரு சில சந்தர்ப்பங்களிற் போக, நிலைமைகள் மேலும் மோசமாகியதையே நாம் கண்டுள்ளோம். அப்படியாயின், இனக்கொலையும், உணவுகள், மருந்து வகைகள் போன்றவற்றை வழங்காது மக்களைத் தொகையாக வாட்டுதலும் நடக்கும் போது அயல் நாடுகள் சும்மா இருக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது. 'இனச்சுத்திகரிப்பு' என்ற நாகரிகமான பேரில் மக்கள் தமது இருப்பிடங்களிலிருந்து பலவந்தமாக விரட்டப்படும் போது என்ன செய்வது என்ற கேள்வி எழுகிறது. இவ்விடங்களிற், குறுக்கீடுகள் தேவையா, சரியா என்ற கேள்விகளை விட அவை சாதித்தது என்ன என்பதே முக்கியமான நடைமுறைப் பிரச்சனையாக உள்ளது.

நாடுகட்கு இடையிலான உறவுகள் பற்றிய நடத்தை விதிகளை எல்லா நாடுகளும் சமம் என்ற அடிப்படையில் மட்டுமே கடைப்பிடிக்க முடியும். இவ் விதிகள் போதிக்கும் பரஸ்பர மதிப்பும் ஒருவரது அலுவலில் மற்றவர் குறுக்கிடாமையும் நாடுகட்குள்ளேயும் மொழி, மதம், பிரதேசம், தேசிய இனம், சமுதாயப்பிரிவு என்ற அடிப்படைகளில் பரஸ்பர மதிப்பும் சமத்துவமும் உள்ளபோதே முற்றிலும் சாத்தியமாகின்றன. அல்லாதவிடத்துத் தலையீடுகள் பல வேறு நோக்கங்களுக்காக நேரலாம். பெரும்பாலான சூழ்நிலைகளிற் தேசியவாதம் (பேரினவாதமாகவோ குறுகிய இனவாதமாகவோ) இத்தகைய நிலைமைகட்குக் காரணமாகி உள்ளது. இவ்வாறான பிரச்சனைகள் வெகுஜன அரசியல் மூலமே தீர்க்கப்பட முடியும். மற்றப்படி எந்தவிதமான குறுக்கீடும் அடிப்படையான பிரச்சனையிற் கை வைக்கத் தவறி

www.tamilarangam.net

விடுகிறதால் தீர்வுகள் மிகத் தற்காலிகமானவையாகவே அமைகின்றன.

வல்லரசு அரசிலும் குறுகிய தேசியவாதக் கண்ணோட்டமும் ஆதிக்கம் செலுத்தும் நிலைமைகளில் அயற் குறுக்கீடும் ஒடுக்குமுறை ஆட்சிகட்கெதிராக மேற்கொள்ளப்படும் வியாபாரத் தடைகளும் நடைமுறைச் சாத்தியமற்றுப் போகாத பட்சத்திற் பிரச்சனைகளை மேலும் சிக்கலாக்கி விடுகின்றன. இவற்றை விட முக்கியமாக, இத்தகைய நெருக்கடிகளிற் தலையிடும் சக்திகளின் நடு நிலைமை பற்றிய நம்பிக்கை, வல்லரசு அரசியலாலும் அதன் கைப்பாவையாகிவிட்ட ஐ.நா. போன்ற நிறுவனங்களாலும் பெருமளவும் இல்லாதொழிந்து விட்டது.

மனித உரிமை தொடர்பான பிரச்சனைகள் அரசியலினின்று தனிமைப்படுத்தப்பட முடியாதன. ஜனநாயகம் என்றால் என்ன என்பது உற்பத்தி உறவுகளினின்றும் சமுதாயத்தின் வர்க்கத் தன்மையினின்றும் வேறுபடுத்த இயலாதது. அரசியல் அதிகாரம் முற்றாகப் பரவலாக்கப்படாத அளவில் முழுமையான ஜனநாயகம் பற்றிய பேச்சு வெறுமையானதே. ஒரு நாட்டின் பொருளாதாரத்தின்மீது தனியார் சுதந்திரம் என்ற பேரில் ஒரு சிறுபான்மை ஆதிக்கம் செலுத்தும் நிலையில் ஜனநாயகம் ஒரு பம்மாத்து வேலையே. உலக நாடுகள் மீது ஒரு சில நாடுகளில் அதிகாரத்தில் உள்ள சிறுபான்மை ஆதிக்கம் செலுத்தும்போது, அவர்களது ஜனநாயகம் பற்றிய பேச்சு மட்டுமன்றி மனித உரிமை பற்றிய பேச்சும் அந்தச் சிறுபான்மையின் நலனைப் பேணவே உபயோகிக்கப்படுகிறது.

மனித உரிமைப் பிரச்சனையை மனித சமத்துவத்தின் அடிப்படையிலும் வேறுபட்ட மனித சமுதாயங்களிடையிலான சமத்துவத்தின் அடிப்படையிலும் அணுகினாலொழிய மனித உரிமை பற்றிய ஒரு பொதுவான நிலைப்பாட்டை வந்தடைய முடியாது. எனவே மனித உரிமைக்கான போராட்டம் ஜனநாயகத்திற்கும் மனித சமத்துவத்துக்குமான போராட்டத்துடன் நெருங்கிப் பிணைக்கப்பட வேண்டியுள்ளது.

3.ஒரு சமுதாய அமைப்பு அநீதியானதாகவும் சமுதாயத்தின் ஒரு பிரிவினரைக் கொடுமையாக ஒடுக்குவதுமாக அமையுமாயின் அதற்கெதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் எழுவது நியாயமாக நமக்குத் தெரிகிறது. அந்த நியாயமான எழுச்சி அச் சமுதாய அமைப்பிற்குக் காவலாக உள்ள அரசால் ஒடுக்கப்படுகையில் ஒடுக்கப்பட்ட மக்கள் அரசின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'சட்ட ரீதியான' வன்முறைக்கு எதிராகச் 'சட்டவிரோதமான' வன்முறையில் இறங்குகிறார்கள். இவ்வாறான சூழ்நிலைகளில் வன்முறை, பயங்கரவாதம் போன்ற சொற்களின் பொருள் ஒருவர் எந்தக் கோணத்தினின்று சமுதாய முரண்பாடுகளை நோக்குகிறார் என்பதைப் பொறுத்து மாறுபடுகிறது. நிபந்தனையற்ற சாத்வீகம் சமுதாயத்தில் நடைமுறையிலுள்ள, சட்டத்தின் கண்ணுக்குத் தென்படாத வன்முறையை மறைமுகமாகவேனும் அங்கீகரிக்கிறது.

மனித உரிமையில் அடிப்படையானது மனிதருக்குத் தம் இருப்பைப் பேணும் உரிமையாகும். அது மறுக்கப்படும் போது, அந்த உரிமையைப் பேண அவர்கள் ஆயுதமேந்த அவசியமாகிறது. எனவே பிற மனிதரது அடிப்படை மனித உரிமைகளை மறுப்போரது மனித உரிமைகள் பற்றிய தாராளவாத நிலைப்பாடுகள் ஒடுக்கப்பட்ட மக்களது போராட்ட நடைமுறைக்கு ஒவ்வாதன. அதே வேளை, மனிதாபிமானமும் மனித உரிமை பற்றிய கரிசனையும் புரட்சிவாதிகட்கும் போராளிகட்கும் அவசியமில்லை என்று கருதுவது நிச்சயமாக மாக்ஸிய-லெனினிஸக் கொள்கைக்கும் நடைமுறைக்கும் அந்நியமானது.

'முட்டைகளை உடைக்காமல் ஒம்லெற் செய்ய முடியாது', 'புரட்சி என்பது பின்னேர விருந்துபசாரமில்லை' என்ற விதமாக மாக்ஸியத் தலைவர்களை மேற்கோள் காட்டுவோர் இந்த விதமான கருத்துக்களை அவை குறிக்கும் சூழ்நிலைகளினின்றும் பிரித்துப் பார்க்கிறார்கள். இவர்களது பார்வையில் நண்பரல்லாத அனைவரும் எதிரிகள். மாக்ஸிய-லெனினிஸம் தந்த உன்னதமான போராளிகளான மாஓசேதுங், ஹோ சி மின் போற்றோருக்கோ, எதிரி அல்லாத எவரும் நண்பராகக்கூடும். புரட்சிகரப் போராட்டங்களில் தவறுகள் நேரலாம், அநாவசியமான சேதமும் உயிரிழப்பும் நேரலாம். இதனாற் கண்ணை மூடிக்கொண்டு மனமறிந்த தவறுகளையும் கொலைகளையும் அங்கீகரிப்பது புரட்சிகரப் பார்வையல்ல. எதிரியுடன் நிற்பவர்களையும் வென்றெடுப்பது அவசியம் என்பதால் வீணான இழப்புக்கள் தவிர்க்கப்பட வேண்டும். இந்த வகையிற் புரட்சிகரப் போராட்டக் கண்ணோட்டத்தினின்றே எதிரணியில் நிற்பவர்களது அடிப்படை உரிமைகளை மதிக்கவும் அவர்களிடமும் மனிதாபிமானம் காட்டவும் ஒரு தேவை உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சில அடிப்படையான நடத்தை விதிகளைப் புரட்சிகர சக்திகள் ஏற்று நடப்பதன் அவசியம் பற்றி மாஓசேதுங் மக்கள் யுத்தம் பற்றிய தனது விளக்கங்களில் தெளிவுபடுத்தியுள்ளார். துரோகி, எதிரி, சமூக விரோதி என அடையாளங் காணப்படுவோரை விசாரிக்கவும் குற்றங் கண்டவிடத்திற் தண்டனை வழங்கவுமான உரிமை பொதுமக்களிடமிருந்தே அரசாங்கத்திற்குக் கிடைக்கிறது. அரசதிகாரத்திற்காகப் போராடும் சக்திகள் தாம் எதிர்க்கும் அரசாங்கத்தை விடத் தாம் மக்களுக்குப் பொறுப்பானவர்கள் என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டும். அல்லாது போனால் மக்களுக்காக அவர்கள் போராடுகிறார்கள் என்பது பொய்யாகிவிடும். மக்களுக்காக ஆயுதமேந்துவோர் அந்த உரிமையை மக்களிடமிருந்தே பெறுகின்றனர். மக்களை ஒடுக்கும் கருவிகளாக ஆயுதங்கள் மாறும் போது ஆயுதம் ஏந்துவோர் தம்மை மக்களிடமிருந்து அந்நியப்படுத்தி முடிவில் மக்களின் எதிரிகளாகவும் மாறிவிடுவர்.

4. முன் குறிப்பிட்ட அடிப்படையில் ஜனநாயகம், மனித உரிமை என்பன பற்றிய தமது நிலைப்பாட்டைத் தெளிவாகவே மக்களிடம் முன்வைக்கும் பொறுப்பு ஒவ்வொரு வெகுஜன இயக்கத்துக்கும் உண்டு. இவ்விஷயங்களில் முழுமையான தெளிவு இல்லாமல் எந்த ஒரு இயக்கமும் ஒரு மக்களைச் சார்ந்த இயக்கமாக அமைய முடியாது.

அடக்குமுறை அரசாங்கங்கள் தமது சட்ட ஒழுங்குகளையும் முதலாளித்துவ ஜனநாயக முறையிற் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயக உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் மீறுகின்றன. அவர்களுடைய மனிதஉரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் அந்த அடிப்படையிலேயே சுமத்தப்படுகின்றன. அதற்கு எதிராகப் போராடும் ஒரு இயக்கம் அவர்களது விதிகளை எல்லாம் ஏற்றுக்கொள்ள அவசியமில்லை என்பதால் எதுவிதமான விதிகட்கும் கட்டுப்படாத விதமாகச் செயற்படமுடியாது. ஒரு சிலரே முடிவெடுத்துத் தன்னிச்சையாக மனிதர்களைத் தண்டிக்கவும் வேதனைக்காளாக்கவும் முற்படுவதை மக்கள் சார்பான நடவடிக்கைகள் என்று அலட்சியம் செய்யும் போது பிழைகள் நடப்பது இயல்பு என்று நியாயப்படுத்தும் போதும் பிற விடுதலைப் போராட்டங்களிலும் சமுதாயப் புரட்சிகளிலும் நடந்த நிகழ்ச்சிகளை ஆதாரங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டி விளக்க முற்படும் போதும் சரித்திரத் தவறுகளைத் தவிர்க்கவே அவசியமில்லாத நடத்தை விதிகளாக மாற்றி விடுகிறோம்.

பல அரசியற் கட்சிகளிலும் இயக்கங்களிலும் உள்ள ஒரு பயங்கரமான குறைபாடு, பிழைகளை ஏற்றுக்கொள்வது பற்றிய அச்சமாகும். விமர்சனம், சுயவிமர்சனம் என்று பேசுவது நாகரிகமாகி விட்டாலும், பகிரங்கமாகத் தவறுகளை ஒப்புக் கொண்டால் மக்கள் தங்களை மதிக்கமாட்டார்கள் என்ற அச்சங் காரணமாக அரசியற் தலைவர்கள் தம்மைத் தவறுகட்கு அப்பாற்பட்டவர்களாகக் காட்டிக் கொள்வதாகவே தெரிகிறது. செயற்படாதவர்களே தவறு செய்யாதவர்களாக இருக்க முடியுமென்பதை இடையிடையே நாம் மறந்து விடுகிறோம். ஒரு கட்சி தனது பிழையை ஒப்புக்கொண்டு அதைத் திருத்தினாலும் அதை அக் கட்சிக்கு எதிராகத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தும் போக்கு மாற்றுக் கட்சிகளிடையே உண்டு. இந்தச் சூழ்நிலையும் பிழைகளை நியாயப்படுத்தும் தேவையை அதிகமாக்குகிறது. இதன் விளைவாக ஒரு முறை நடந்த தவறு நியாயப்படுத்தப்படுவதோடு நில்லாமற் பின்னரும் அதே விதமான பிழைகளைத் தொடர்வதற்கு வசதியாகி விடுகிறது.

எந்தவொரு இயக்கத்தினதோ கட்சியினதோ ஆதரவாளர்களதும் உறுப்பினர்களதும் விசுவாசம் குருட்டுத்தனமானதாக இருக்குமாயின் அது அந்த விசுவாசத்துக்கு உரியவர்கட்கே கேடானது. ஒரு போராட்டத்தின் போக்கில் நடக்கும் தவறுகள் விமர்சிக்கப்படுவது பகைமையான நோக்கத்துடன் செய்யப்படுகிறது என்று இவர்கள் நம்புகிறார்களாயின் இவர்கள் வெறும் புகழ்ச்சியாலேயே தம் விசுவாசத்ததிற்குரியவர்களை அழிக்க உதவுவார்கள்.

மனிதர்கள் தவறுவது இயல்பு. தவறுகளின் தன்மையும் தவறு நேரும் சூழ்நிலையும் கணிப்பிலெடுக்கப் பட்டாலொழியத் தவறுகட்குரிய தண்டனை பற்றிய முடிவுகள் சரியாக இருக்க முடியாது. விமர்சனமும் உடன்பாடின்மையும் தம்மளவில் துரோகமோ பகைமையான செயலோ ஆகிவிட மாட்டா. கருத்து வேறுபாட்டின் அடிப்படையில் கடுமையான தண்டனை வழங்கும் அதிகாரமும் ஒரு சிலரின் கையில் இருப்பது ஆபத்தானது. தவறான முறையிலோ குற்றத்திற்கு ஒவ்வாத முறையிலோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழங்கப்படும் தண்டனைகள் போராட்டத்தைப் பலவீனப் படுத்துவது தவிர்க்க முடியாதது. இத்தகைய தவறுகளைத் தவிர்ப்பதாயின் விடுதலைப் போராட்டம் பரந்துபட்ட ஜனநாயக முறையிலான ஒன்றாக அமைய வேண்டும். மனித உரிமைகள் பற்றிய தெளிவான ஒரு நிலைப்பாடு அந்த அடிப்படையில் முன்வைக்கப்பட்டுக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

5. போராடும் உரிமை என்பது மனித உரிமையின் மறுப்பல்ல. மனித உரிமையின் மறுப்பு ஸ்தாபனரீதியாக அரச அதிகாரம், ராணுவ வலிமை என்பனவற்றின் துணையுடன் நிகழும்போது அதற்கெதிராகப் போராடும் உரிமை மனித உரிமையின் ஒரு பகுதி. அதுவே மனித உரிமையின் உத்தரவாதம்.

ஒரு நியாயமான போராட்டத்தின் போது நிகழும் தவறுகள், அவை நேரும் சூழ்நிலையையொட்டி அனுதாபத்துடன் நோக்கப்படவேண்டும். போராடும் உரிமை என்பது சகலவிதமான உரிமை மீறல்கட்குமான அனுமதிச் சான்றாகிவிடக் கூடாது.

மனித உரிமை மீறல் பற்றிய விவாதங்களிற் பல தடவைகளில் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டும் தரப்பினர் இருவருமே பாரிய தவறு செய்தவர்களாக இருக்கும் போது ஒருவர் செய்த தவறுகள் மற்றவரது தவறுகளை நியாயப்படுத்தப் பயன்படுவதைக் காண்கிறோம். பெரும்பாலான நிலவரங்களில் இது கட்சிகளையும் இயக்கங்களையும் பற்றிய விவாதமாகவே மாறிவிடுகிறது. போராட்டம் எதைப்பற்றியது என்பதை மட்டுமன்றி மக்கள் என்று ஒரு சக்தி இருப்பதையே மறந்தும் இவ்வாறான விவாதங்கள் நடைபெறுகின்றன.

மனித உரிமை மீறல்கள் பற்றிப் பட்டியல் போட்டுக் குற்றப் பத்திரிகை வாசிப்பதோடு மனித உரிமை பற்றிய நமது அக்கறை நின்றுவிடக் கூடாது. தவிர்க்கக் கூடிய தவறுகளைத் தவிர்ப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அனைத்திலும் முக்கியமாக ஆரோக்கியமான முறையில் விவாதிக்கவும் கருத்துப் பரிமாறவும் விமர்சனங்களைப் பொறுப்புடன் செய்யவும் பொறுமையுடன் கேட்கவும் நாம் பழக்கப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை



# மனசுக்குள் உக்கார்ந்தபடி

–ரவிவர்மன்–

உண்மையிலே அவனைப் பொறுத்தவரை அவன் அவசரப்பட்டுப் போன நாட்கள் என்று கூடச் சொல்லலாம். அந்தநாட்கள் ஒவ்வொன்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவனுடைய மனசின் ஓரங்களில் எத்தனை காத்திரமான கல் வெட்டுக்களாய் புதைந்து போய்க்கிடக்கின்றன. அதையெல்லாம் இப்போது நினைத்து நினைத்துப்பார்த்து வேதனைப்பட்டு தணலில் விழுந்த புழுவாய் அவஸ்த்தைப்படுவது ஒரு தொற்று நோய் போல் அவனை ஆட்டிப்படைக்கின்றன. அதையும் மீறி இந்தவாழ்க்கை வறுமைக்கோட்டின் அடிப்பாதாளத்தில் இறக்கி இவனில் எத்தனை ரணங்களைத்தான் உதிர்த்தியிருக்கிறது.

பட்டு உழுத்துப்போன ஒரு தனிமரமாய் அவன், குந்தியிருந்து எச்சம் கழிப்பதற்கு காகம் குருவிகள்கூட இப்போது அவனிடம் வருவதில்லை இந்தச்சீவியம் இன்னும் எத்தனை காலத்திற்கு? சீ என்று போய்விட்டது வாழ்க்கை. எங்காவது கண்காணாத தேசத்துக்கு ஓடிப்போய் வேற்று மனதர்களுடன் கொஞ்சக்காலம் வாழ்ந்துவிட்டு வரலாமென்றாலும் அதுக்கும் கொஞ்சம்கூடப்பிடிப்பில்ல மனமுமில்ல எல்லாவற்றையும் யாரிடம் போய் சொல்வது.

குசேலனுக்காவது கண்ணபிரான் என்ற நல்லதோர் தோழன் இருந்தான். ஆபத்தான வேளைகளில் அவனையாவது பரிமாறிக்கொண்டார்கள். இவனுடைய கண்ணபிரான்கள் எல்லாம் இவனையும் இவனைப்போல் இன்னும் ஆயிரக்கணக்கானவர்களையும் நடுத்தெருவில் கொண்டுவந்து விட்டு சமாதி கட்டிவிட்டு தப்பியோடிவிட்டார்களே யாரைக் குற்றம் சொல்வது இவர்களையா? அவர்களையா?

சிதில் பிடித்துப்போன இவனுடைய வாழ்க்கை இப்போது நல்லாகவே நாறத்தொடங்கிவிட்டது மூக்கைப்பொத்துவதற்கு பதிலாக உறவினர்கள் நண்பர்கள் கண்டால் கண்ணையல்லவா மூடிக்கொண்டு வேறுபக்கம் நடையைக்கட்டுகிறார்கள். இந்த நகரத்து வாழ்க்கை கூட ஒரு நரகமாய் இன்னும் எத்தனை காலங்களை இவனுடன் கட்டியிழுக்கப்போகிறதோ பாவம் இனிவரும் நாட்கள்.

மழை நல்லா கொட்டித் தீர்த்துக்கொண்டிருந்தது. வானம் பீச்சியடிக்கும் நீர்த்துகள்களால் தெருக்கள் நிரம்பி வடிந்து பள்ளங்களை நோக்கி ஓடித்தப்பிக்கொண்டிருந்தது வெள்ளநீர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழுக்கும் சேறும் போவோர் வருவோர் ஒவ்வொருவரின் கால்களிலும் ஒட்டிக்கொண்டு கட்டிப்பிடித்துக் கெஞ்சின. அண்ணே அக்காமாரே எங்களையும் உங்கள் கால்களோடு ஒட்டிக்கொண்டு போங்கள். எத்தனை காலமாய்த்தான் இந்தத் தெருக்களில் கிடந்து மிதிபட்டு வதைபடுவது.

அவன் அந்தச் சைவக்கடையின் முன்பக்கம் சுவரோடு ஒட்டிப்போய் கைகளை மார்போடு இறுக்கியபடி விரல்களை ஒன்றோடு ஒன்று உரசியபடி நெட்டிமுறித்து ஏதோ செய்து கொண்டிருந்தான். அவனைச் சுற்றிலும் அவனைப் போல் மழைக்கு ஒதுங்கிய இன்னும் நிறையப் பேர் அனேகம் பேர் பீடியும் ஒரு சிலர் சிகரெட்டும் இழுத்துக் கொண்டிருந்தார்கள் அவர்களின் வாயும் மூக்கும் பிரிட்டிஷ்காரர் இலங்கையில் அறிமுகப்படுத்திய கரிக்கோச்சை நினைவூட்டின. மழை விடுவதற்கான அறிகுறிகள் இல்லவே இல்லை ஓவென்று அழுது வடித்துக்கொண்டிருந்தது வானம்.

தெருக்களையெல்லாம் நிரப்பிக்கொண்டு வெள்ளம் பழைய காகிதத்துண்டுகளையும், பீடி சிகரட் குறைகளையும், ஜோடி பிரிந்து, தனித்துப் போன ஒற்றைச் செருப்புகளையும் அழுக்கையும் சேற்றையும் காவிக்கொண்டு, இன்னும் ஏதேதோ துண்டு துணிகளையும் இழுத்துக் கொண்டு கடற் கொள்ளைக்காரனைப் போல் தப்பியோடிக்கொண்டிருந்தது.

இடையடையே வந்து போகும் ஓட்டோ, கார், லொறி, பஸ் இயந்திரமிருகங்களுக்கு ஈடுகொடுத்து முண்டுபிடிக்கத் தெரியாமல் வெள்ளைநீர் நுரை கக்கியபடி அருகிலுள்ள சுவரோரங்களில் முட்டி மோதி அடிபட்டெழுவது பார்க்கப் பாவமாய்த்தானிருக்கிறது. இவன் நின்ற சைவக்கடையின் படிகளிலும் ஏறி எல்லோர் கால்களிலும் விழுந்தடித்து திட்டு வாங்கியது.

வானம் ஒரே கருமையாயிருந்தது. இடையிடையே மின்னல் வெட்டி வெட்டி மறைந்து குறளிவித்தைக்காரனைப் போல் வேடிக்கைகாட்டியது. இடி கொஞ்சம் கூட இல்லை எங்கே போயிருக்கும்? இலத்திரன்களும் நியூத்திரன்களும் ஏதும் சமாதான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருக்குமோ? என்னவாய் இருந்தால் தான் எனக்கென்ன? இரவுக்கு சைவக்கடை இடியப்பத்துக்காவது எவனாவது மன்னிக்கவும் எவராவது இரங்கினால் கூட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவனுக்கு போதுமென்றாகிவிடும். காலையில் சாப்பிட்ட பாண்துண்டும் பிளேன்ரீயும் அதற்குப்பிறகு யார்யாரோ ரெண்டோ மூன்றுதடவை வாங்கிக் கொடுத்த பிளேன்ரீகளும்.. அதைவிட இன்று வயிற்றுக்குள் வேறு ஏதும் போனதாக இல்லை அடிவயிற்றிலிருந்து உன்னியெழும் பசியின் ஆவேசம் கண்களில் சின்னச் சின்ன மின்னல்கள் தோன்றி மறைவதான ஒரு மயக்கம். வயிற்றுக்குள் தேட்டிசிக்ஸ் கிரனைட் வெடித்தமாதிரியான ஒரு கலவரம் ரெண்டு மாசச் சுமையை வயிற்றில் சுமக்கிற பெண்கள்போல் குமட்டிக்கொண்டிருந்தது. தொண்டைக்குழியில் ஒட்டிக்கொண்டிருந்த சளியை காறியெடுத்தான் வாய் நிறைந்திருந்தது. வெளியே எட்டித்துப்பவும் முடியவில்லை திரும்பவும் அது உள்ளுக்குள் போய்விட்டது. வயிற்றின் அடிவரை போயிருக்கலாம். இதென்ன? இதைவிட அசிங்கத்தனமான வாழ்க்கையில் தானே இவனுடைய காலங்கள் அடிபட்டுப் போய் இன்று இப்படியாகிப்போய் நிற்கிறான்.

எதையாவது திட்டித்தீர்க்கவேணும் போலிருக்கிறது. இல்லையேல் எதிலாவது முட்டிமோதி உடைந்து நொறுங்கிப் போகமாட்டேனா? அப்படியில்லாவிட்டால் மண்ணைத்தின்று காற்றைக்காதலியாக்கி வாழ்வதற்கெனினும் இந்தச்சரீரமும் உலகமும் ஒத்துக்கொள்ளுமெனில் கொஞ்சநாட்களாவது பிழைத்துக் கொள்ளலாம். இல்லையெனில் இமயத்தைப் போன்ற ஒரு பெரிய கேள்விக்குறி இவன் வாழ்வின் முன்னால்.

கொழும்புக்கு புதிதாய் யாராவது வந்திருந்தால் அவர்களின் காலடி இந்தச் சந்தியில் படாமலிருக்க முடியாது. பேர்தான் ஏதோ ஐந்துலாம்புச்சந்தி ஆனால் இது சந்திப்பதோ எட்டு ஒன்பது சந்திகளை இவனும் இப்போபோது தான் எண்ணிப்பார்த்தான். ஒன்பது லாம்புச்சந்தி என்று உச்சரிப்பது அவ்வளவு அழகல்ல என்பதற்காக ஐந்துலாம்புச்சந்தி என்று வைத்தார்களோ என்னவோ தெரியாது. ஏன் நமக்கு அடுத்த ஊர்ப்பிரச்சினையெல்லாம்.

கொழும்பின் மையமே இந்த ஐந்துலாம்புச்சந்திதான் உங்கள் நண்பர் உறவினர் தெரிந்தவர்கள் யாரையாவது சந்திக்கவேணுமெனில் இந்தச்சந்தியின் ஏதாவதொரு கரையின் ஓரத்தில் வந்து நில்லுங்கள் நாலாபக்கமும் விழிகளை வீசிப்பாருங்கள் எப்பிடியாவது பிடித்துவிடலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிட்டத்தட்ட கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்தமாதிரி அதற்கிடையில் உங்களை பொலிஸ்காரன் தமிழரென மணம்பிடித்து கண்டுபிடித்தால் அப்பாறை கல்லுடன் சேர்த்து கயிற்றால் கட்டி கடலில் போட்டமாதிரித்தான். நீங்கள் என்ன தேவாரம் பாடினாலும் மீள்வது கடினம்.

செட்டியார்தெரு, மாலுக்கடை, செக்கட்டித்தெரு டாம்ஸ்ரீட், மெயின்ஸ்ரீட், ஆட்டுப்பட்டித்தெரு, சென்ரல் றோட் என்று எல்லாம் இந்தச் சந்தியிலிருந்து தான் முளைக்கின்றன. இவனும் கொழும்புக்கு வந்த காலத்திலிருந்து இன்றுவரை இந்தசந்திக்கு வராத நாட்களே இல்லையெனலாம். இவனுக்கும் இந்தச்சந்திக்கும் அத்தனை நட்பென்று கூடச்சொல்லலாம்.

ஈரம் ஊறி கால்கள் இரண்டும் விறைத்துப் போனமாதிரி இருக்கிறது. வானம் புருஷனை இழந்த பெண்ணாய் ஓவென்று முன்னையவிட இன்னும் அதிகமாய் ஆவேசமாய் அழுது வடித்துக்கொண்டிருந்தது. ஒவ்வொரு பொக்கற்றாய் கையை விட்டுப் பார்த்தான். ம்..... அந்தரெண்டு ரூபாய்க் குற்றியைத்தவிர வேறு சதம் கூட இல்லை. ஏழெட்டு நாளைக்கு முன் இந்தியாவில் இருந்து வந்த அவனுடைய நண்பன் ஒருவனின் கடிதம் மட்டும் கனமாய் இருந்தது. கடிதமூலையில் காந்திக்கிழவன் தலையைத் தொங்கப் போட்டபடி இருந்தான். பதில் எழுதியும் அனுப்பாமல்க் கிடக்கும் இவனது கடித ஒற்றையுமாகச் சேர்த்து இன்னும் கனமாய் இருந்தது.

இந்தக்கடிதம் போல் இவனுடைய அந்த நண்பனின் வாழ்க்கையும் சிறைப்பட்டுப்போய்த்தான் கிடக்கிறது. அவனுடைய கடிதத்தின் ஒவ்வொரு வரிகளும் விரக்தியையும் வேதனையையும் உள்வாங்கி கரையில் கிடந்து துடிக்கும் மீன்குஞ்சுகளாய் மூச்சிரைக்கும். அப்பப்ப வரும் அவனுடைய கடிதங்களை படிக்கும் போதெல்லாம் தனிமை மறந்துவிடும் பழைய நினைவுகளெல்லாம் ஒன்றுக்குப்பின் ஒன்றாய் வரிசையாய் வந்து இவன் முன் அமர்ந்துவிடும். சோகம் ததும்பிய மெல்லியகாற்று வீசும். பனிபெய்யும்.

அந்த மண்டபம் அகதிமுகாமின் சின்னச் சிறைக்கூடத்துக்குள் அவன் இந்நேரம் என்னாவது செய்து கொண்டிருப்பானா? அல்லது இருள்கலந்த இரவின் வானத்தையும், உடுக்களையும் வெறுப்பாய் ரசித்துக்கொண்டிருப்பானோ? காற்று அள்ளியிறைக்கும் மண்டபம் கடலின்

www.tamilarangam.net

பேரிரைச்சலை காதில் உள்வாங்கி கடலுக்கும் அள்ளியிறைக்கும் காற்றுக்கும் சாபமிட்டுக் கொண்டிருப்பானோ? அல்லது இவனைப் போல் வெறும் வயிற்றுடன் கழியும் இந்த ராப்பொழுதை தூஷித்துக் கொண்டிருப்பானோ? அவனின் கடிதத்தை திரும்பவும் பிரித்துப் பார்த்தான்.

நண்பா வாழ்க்கை நம்மில் எவ்வளவு கோரமாய் முண்டுபிடிக்கிறது. இங்கிருக்கும் ஒவ்வொரு கணங்களும் நான் தீயாய்க் கரைந்து கொண்டிருக்கிறேன். வெளியில் எங்கேனும் செல்லவும் முடியாது. உள்ளேயும் ஒருங்கமைப்பாய் இருக்கமுடிவதில்லை, வாழ்க்கை எனக்கு கடுகளவேனும் பிடிக்கவில்லை. ஏன் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறேனோ தெரியவில்லை. இதைவிட இனக்கு சாவதே மகத்தானதாய் தோன்றுகிறது. முடிவில்லாமல் ஒவ்வொரு கணங்களும் செத்துக் கொண்டுதான் இருக்கிறேன். உனக்கு நினைவிருக்கிறதா? வைலஸ், மதி, தாசன், நஸ்வர், குலம் நமக்காக மரணித்து நேற்றுடன் ஆறுவருடங்கள் எல்லோரும் மறந்து போயிருக்கலாம் இந்த உலகமே மறக்கட்டும் என்னால் அவர்களை மறக்கவே முடியாது. நேற்று முழுவதும் ஏன் இன்றும் கூட அவர்களுக்காக ஏங்கி இரக்கப்பட்டுக் கொண்டுருந்தேன். பாவப்பட்டது அவர்களும் குடும்பங்களும் தான்.

அவர்களுக்காக இரக்கப்பட்டு, இந்த தேசத்துக்காக உதிர்ந்து போனவர்கள் என்பதைவிட, எம்மால்கூட எதைத்தான் சொல்லவோ செய்யவோ முடியும். நாங்கள் எல்லோரும் முந்தி ஒரு நாள் தஞ்சாவூரில் வைத்துப் படித்த அந்தச்சிறுகதை ஞாபகம் வருமே இந்நேரம், வைலஸ் உரத்துப் படிக்க நாங்களெல்லோரும் சுற்றியிருந்து கேட்டு மனம் நொந்து போன, உஞ்சலிருத்தியில வாற அந்தக் காந்திர தேசத்துக் கிழவன் பாவம் அவனல்ல நாங்கள் தான், நான் நேற்று இரவும் ஒரு கனவு கண்டேன் வைலஸ் எனக்கருகில் வந்திருந்து புதிதாய் ஒரு கதை சொல்கிறான். அதை இப்பவே சொன்னால் நீ இன்னும் நொந்து போய்விடுவாய் காலம் வரும் போது சொல்கிறேன். மேலே படிக்க முடியாமல் கடிதத்தை மடித்து உள்ளுக்குள் போட்டான். கண்கள் இரண்டும் கம்மாக் கரைச் சேற்றுத்தண்ணீர் மாதிரி கலங்கிப் போயிருந்தது. மழை விடுவதாகத் தெரியவில்லை மழை விடுமட்டும் இந்தச்சந்திதான் அவனுக்கு கதி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொடரும் கருத்தாடல்...

## செல்வி திருச்சந்திரன்

சிவசேகரம் அவர்களின் பதில் 16ம் இதழில் இருந்து பிரசுரிக்கப் பட்டிருந்தது. இரு காரணங்களுக்காக அதற்குபதில் எழுத எனக்கு மனம்வரவில்லை. முதலாவதாக அந்தப்பதிலில் தொனித்த அகங்காரம், தூக்கி எறிந்து பேசிய மனோபாவம் போன்றவை என்னை மிகவும் பாதித்திருந்தது. ஆழ்ந்த அறிவு சார்ந்த புத்திஜீவித்தனம் அப்பதிலில் இருக்கவில்லை. எழுத்தால் ஆகிய ஒரு வன்முறையைச் சார்ந்ததாக அது எனக்குத் தொனித்தது. அந்தவன்முறையை எதிர்கொள்ள எனது மனம் பழக்கப்பட்டிருக்கவில்லை.

இரண்டாவது காரணம், அவர் எடுத்துக்காட்டிய வாதப்பிரதிவாதங்களை எடுத்து ஆராய்வதற்கு ஒரு நீண்ட கட்டுரையை நான் எழுதவேண்டி இருக்குமே. இத்தனை வேலைப்பழுவின் மத்தியில் இதற்கு நேரம்கிடைக்குமா என்ற சந்தேகம். இருந்தாலும் இப்பொழுது அப்பணியிலீடுபடுகின்றேன். இதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. சிவசேகரத்தின் பதில் என்னைப்போல வேறுசிலரையும் பாதித்திருந்தது. அதற்கு நான் பதில் எழுதாவிட்டால், அவர் கூறியவற்றை நாமும் அங்கிகரிக்கின்றோம் என்றும், வாசகர்கள் பலர் அவர்கூறியதே முடிவானது என்றும் பிழையாக விளங்கிக்கொள்வார்கள், என்று நெதர்லாந்து வாழ் பெண்கள் சிலர் எனக்கு கடிதம் மூலம் தெரிவித்திருந்தார்கள் அதேபோல இங்குள்ள பெண்கள் சிலரும் நேரடியாகவும் கடிதம் மூலமும் தொடர்புகொண்டு நான் எனது விளக்கங்களை எழுதவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அவர்களது நியாயம் சரி என்றே எனக்குப்பட்டது. அவர்கள் என்னிடம் வைத்திருக்கும் மதிப்பிற்கும் பேரன்பிற்கும் நான் அடிபணிய வேண்டியிருக்கிறது. ஆகையால் இதோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என் விளக்கங்கள்.

சிவசேகரம் அவர்கள் பழமொழிமூலம் 'ஏட்டுச்சுரக்காய்' நிறுவனத்தினது அங்கீகாரம் தேவையில்லை என்று கூறியதன் பொருள் தெளிவாக இல்லை. அவர் நான் சார்ந்திருக்கும் பெண்கள் கல்வி, ஆய்வு நிறுவனத்தைக் குறிப்பிடுகின்றாரா? இது மிகவும் காத்திரமான கேள்வி. எமது நிறுவனத்தின் கொள்கைகள், திட்டங்கள், செயல்முறை பற்றிய விளக்கங்களை அவர் அறிந்து வைத்திருக்கின்றாரா என்பது எனக்குத் தெரியவில்லை. அந்நிலையில் எப்படி நான் வரட்டு வேதாந்தம் - அதாவது நடைமுறைக்குப் புறம்பான வேதாந்தம் பேசுவதாக என்னை அவர் மட்டம் தட்டலாம்? இது நாகரீகமானதா? பண்பான கருத்து வாதமா? அல்லது தனிப்பட்ட முறையில் என்னைத் தாக்க முற்படுகின்றாரா? என்றாலும் நான் கூறுவது ஏட்டுச்சுரக்காய்க்கு ஒப்பானதல்ல என்பதை மிக நாகரீகமான, பண்பான முறையில் விளக்க முற்படுகின்றேன். நான்சார்ந்திருக்கும் நிறுவனத்தின் அத்தனை பேரிலும் ஆசிரியர் பழி சுமத்துகிறார். இது எனக்கு இன்னும் புரியாத புதிராகவே இருக்கின்றது. நான் கூறியவை எல்லாம் எனது தனிப்பட்ட கருத்துக்களே என்றாலும் அவர் எமது நிறுவனத்தை குறிப்பிடுமுன் எமது நிறுவனத்தின் கொள்கை,கோட்பாடுகளை அறிய முற்பட்டிருக்கலாம்.

பெண்நிலைவாதம் மேலைத்தேயைச் சரக்கல்ல என்பதை ஆணித்தரமாக எடுத்துரைப்பது ஒரு காலகட்டத்தின் தேவையாக இருந்தது. மேலைத்தேய ஆதிக்கம் கூட சில தத்துவக்கோட்பாடுகளை தங்களதே என்று கூறி கீழைத்தேயத்தை கீழ்மைப்படுத்திய காலகட்டத்தில் பெண்களது கலாச்சாரம் கூட அதில் அடக்கப்பட்டது. கீழைத்தேய பெண்களது கலாச்சாரம் உடன்கட்டை ஏறுதல், விதவை விவாகமறுப்பு, போன்ற காட்டுமிராண்டித்தனம் நிறைந்த ஒன்று என எள்ளிநகையாடிய காலகட்டத்தில் கீழைத்தேயப் பெண்களும் கூட கற்பின் கலாச்சாரத்தை உயர்த்தியிருப்பதே 'சதி' என்று தேசியவாதம் பேச முற்பட்டார்கள். அதேவேளையில் மேலைத்தேய கருத்து ஆதிக்கத்திற்கு எதிராகத் தாங்களும் சில கருத்துக்களை முன்வைத்தார்கள். உங்களது பண்பாடு கீழ்த்தரமானது. பெண்ணொருத்தி இன்னொரு பெண்ணுடன் பால் உறவுகொள்ளல், ஆண்வெறுப்பு போன்றவையே பெண்நிலைவாதம். அது எங்களுக்குத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேவையில்லை எமதுகலாச்சாரத்திற்கு அவை தகுந்தவை அல்ல என்று தேசியம் பேச முற்பட்டனர்.

இப்படிப்பட்டோருக்கு கால தேச காரணிகளைக் கடந்ததே புரட்சி என்று விளக்க வேண்டியிருந்தது. ஒடுக்கு முறைக்கெதிராக எழும் புரட்சிவாதத்தை மேலைத்தேயம் கீழைத்தேயம் என நாம் காரணம் காட்டி கொச்சைப்படுத்த தேவையில்லை. அந்தந்த ஒடுக்கு முறைகளின் பரிமாணங்களை உள்ளடக்கி அவற்றில் பிறப்பதே மாற்றுத்தேடும் புரட்சிக்கொள்கை, இதுவே எனது வாதம். கீழைத்தேயத்தில் விழைந்த பெண்நிலைவாதங்களும் உண்டு என எமது கட்டுரையில் கூறியுள்ளேன். **Femisam and nationalism in the third world** எனக் குமாரி ஜயவர்த்தன ஒரு புத்தகமே எழுதியுள்ளார். கீழைத்தேயத்தில் எழுந்த பெண்நிலைவாதக் கருத்துக்கள் கூட மிகவும் புரட்சிகரமானவை என்பதை உதாரணங்காட்டி குமாரி ஜயவர்த்தனா நிறுவியுள்ளார். இரண்டாம் பந்தியில் சிவசேகரம் ஒரு பிழையான வாதத்தையும் முறை தவறி எடுத்துரைத்திருக்கின்றார். நம்மிடம் உள்ள நீதிபரிபாலன முறை உள்நாட்டு உற்பத்தியா என்று வினவுகிறார்.எம்மிடம் அவை இருந்தன இன்றும் இருக்கின்றன என்று கூறும் நான் உதாரணமாக தேசவழமைச்சட்டம் கண்டிச்சட்டங்கள் கேரளச்சட்டங்கள் போன்றவற்றை முன் வைக்கின்றேன். சமூகவியலாளரும், மானிடவியலாளரும், இன்று இந்த நம் உள்நாட்டு உற்பத்திகள் பெண்களுக்குச் சாதகமானவை என்றும் மேல் நாட்டுத் தாக்கத்தில் [ஆங்கிலேயர்களது வருகையால் டச்சு நீதிபரிபாலன தாக்கத்தில்] எம் பெண்கள் தமது உரிமைகளில் சிலவற்றை இழந்துவிட்டார்கள் என்றும் கூறியிருக்கின்றார்கள். கணநாத் ஒபயசேகர, சாவித்திரி குணசேகர போன்றோர் இதை விளக்கி உள்ளனர். எனது வாதம், எங்கெல்லாம் முன்னேற்றக் கொள்கைகள் உண்டோ அவை மானிடருக்குச் சாதகமானவை என்றால் அவற்றை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவற்றை இனங்கண்டு அவற்றின் தாற்பரியங்களை நன்கு அவதானிப்பது ஒரு சுவாரஸ்யமான அறிவு தேடல். பெண்ணியம் மேலைத்தேயத்தைச் சார்ந்தது என்பது நிருபிக்கப்படமாட்டாது. அவற்றை மறுத்து எத்தனையோ பெண்நிலைவாத சமூகவியலாளர், மானிடவியலாளர் வரலாற்றாசிரியர்களும் ஆய்வுகள் மூலம் வெளிக்கொணர்ந்து விட்டனர். பெண்ணியம் கீழைத்தேயத்திலிருந்தது என்று கூறுவதும் அது கீழைத்தேய

www.tamilarangam.net

மரபாயிருந்தது என்று கூறுவது ஒன்றல்ல. அது மரபாயிருந்தது என்று [நான்கூறாத ஏற்றுக்கொள்ளாத ஒரு கருத்தைப் புகுத்தி] அதை நியாயப்படுத்துவது நேர்மைக்குப் புறம்பான வாதம். ஏன் இந்த மல்லுக்கட்டு, ஏன் இந்த வாய்வன்முறை, வரலாற்றிலிருந்து விலக்கப்பட்ட ஒரு மரபு இருந்தது. அது பெரு மரபு அல்ல. அதை மரபு என்று கூற முடியாது. வரலாற்றிலிருந்து விலக்கப்பட்ட மரபில் பெண்ணியக் கருத்துக்கள் பல இருந்தன என்பதற்கு சான்றுகள் பல தற்போது காட்டப்பட்டு விட்டன.

நான் மாக்ஸியவாத்தையும் மாக்ஸிய வாதிகளின் பங்களிப்புகளையும் அறிய முயன்றதாகத் தெரியவில்லை என்ற ஆசிரியரது கூற்றுக்கு சரிவர அறிந்து வைத்திருக்கின்றேன், புரிந்து வைத்திருக்கின்றேன் என்று மிகப் பணிவான அடக்கத்துடன் கூறுகிறேன். ஆனாலும் ஆழக்கடலின் ஆழத்தை நான் சரிவர விளங்கக்கூடிய நிலையில் இல்லை. எனது பிரசுரத்தினது வாதங்கள் என் கொள்கைகளைச் சார்ந்தவையாக நான் கூறவில்லை. இத்தனை விதமான பெண்நிலைவாதக் கருத்துக்கள் உள்ளன. இத்தனை விதமான பெண்ணிலைவாதிகள் உள்ளனர், அவர்களது வாதங்களும் அனுபவங்களும் இப்படி இருந்தன. எங்களது நாட்டில் இந்த அனுபவங்கள் சிலருக்கு ஏற்பட்டன. என்றும் கூறி உள்ளேன். மாக்ஸியம் கூட பெண்நிலைவாதத்தை உள்ளடக்கவில்லை என்பது மாக்ஸிய பெண்நிலைவாதிகளது கருத்து. என்றாலும் கூட அவர்கள் மாக்ஸியத்தை அதற்காக தூக்கி எறியவில்லை. அதன் தாற்பரியங்களை உணர்ந்து விளங்கி அதைப் பின்பற்றுகிறார்கள். அதேசமயம் தனிப்பட்ட முறையில் பெண்ணிலைவாதக் குழுக்களுடன் அங்கம் வகித்து பெண்ணிலைவாதக் கருத்தரங்குகள் திட்டங்கள் போன்றவற்றில் பங்கேற்பார். இதை நான் மீண்டும் வலியுறுத்துவதற்குக் காரணம் சிவசேகரம் அவர்கள் நான் கூறியவற்றை சரிவரப்புரிந்து கொள்ளாமையினாலேயே. என்னுடைய அனுபவம் இப்படி இருந்தது என்று ஒரு சமூகவியளாளர் கூறினால், என்னுடைய அனுபவம் அப்படி இருக்கவில்லை ஆகையால் நீ கூறுவது பிழை, சுத்தமுட்டாள் தனம் என்று கூறுவது ஒரு புத்திஜீவியின் வாதமாக இருக்கமாட்டாது. என்னுடைய அனுபவம் உன்னுடைய அனுபவங்களைப் போல இருக்கவில்லை ஆனாலும் நீ கூறுவது சரியாய் இருக்கலாம். அதை நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மதிக்கிறேன் என்றே ஒரு அறிவாளி தனது மானிட நேயத்தை வெளிப்படுத்துவான். ஏனென்றால் இங்கு வாதம் ஒரு கொள்கை பற்றியது அல்ல. அதைக்கடைப்பிடிக்கும் மானிடஜன்மங்களின் அனுபவம் பற்றியது. அதிகாரப் போக்கினால் நான் உன்னைவிட அறிவாளி, எனது அனுபவம் தான் சரி. என்று ஒரு பெண்ணிலைவாதி இன்னுமொரு பெண்ணிலைவாதியை கூறி அவரது மனதைப் புண்படுத்தாமல், பெண் என்ற ரீதியில் நீ அடைந்த ஆணாதிக்க அனுபவங்களுக்காக நான் உனக்கு அனுதாபப்படுகிறேன், உனது மனஉழைச்சலைப் போக்குகிறேன் உன்னுடன் சேர்ந்து உனது போராட்டத்தில் பங்குபெறுகிறேன் என்று கூறுவதே பெண் நிலைவாதத்தின் அடிப்படை வாதம். இதில் மாக்ஸியவாதியும் அப்படி அல்லாத பெண்ணொருத்தியும் பெண்ணிலைவாதத்தில் ஒன்று படலாம். ஒரு பெண்ணை சொந்தக்கணவனும் சொந்தத் தகப்பனும் கூட கற்பழிக்குமளவுக்கும் தாழ்ந்து போன மிருகத்தனத்துகு எதிராக நாம் கொடிபிடிக்கும் போது கணவனும், தகப்பனும் மாக்ஸிய வாதிகளாக இருந்து விட்டால் நிலமை வேறானதாகக் கணிக்கப்படுமா? உண்மையான மாக்ஸிய வாதி கற்பழிக்க மாட்டான் என்று சிவசேகரம் கூறினால் அது எப்படிப் பட்ட ஒரு வாதமாக இருக்கும். ஆக இங்கு வாதம் பெண்நிலைவாதம் மாக்ஸிய வாதத்தை நிராகரிக்கிறதா இல்லையா என்பது அல்ல. எல்லாவற்றுக்கும் ஊடாக அண்ணன், தம்பி, தகப்பன், கணவன் போன்ற நெருங்கிய உறவு முறைகளுக்கூடாகவும் மாக்ஸியவாதிகள், தேசியவாதிகள், மதத்தலைவர்கள், அரசியல்தலைவர்கள், சமுகத்தலைவர்கள் எல்லோருக்கும் ஊடாகவும் தென்படும், ஒளித்திருக்கும் ஆணாதிக்கத்தை இனங்கண்டு அதற்கெதிராகப் போராடுவதுதான் பெண்நிலைவாதிகளின் முக்கியகொள்கை நிலைப்பாடு.

தனிப்பட்ட முறையில் நான் மாக்ஸிய வாதியாக இருக்கலாம். இது ஒரு முரண்பாடு அல்ல. மாக்ஸியம் ஒரு வாய்ப்பாடு அல்ல. காந்தியமும் கூட ஒரு வாய்பாடு அல்ல. இவை எல்லாம் பூரணத்துவம் நிறைந்தவை அல்ல. தெய்வீகம் பொருந்தியவை அல்ல. ஆனால் இவற்றுக்கும் பெண்ணிலைவாதத்துக்கும் முக்கிய வேறுபாடு உண்டு. இவை தனி மனிதனால் தங்களது அனுபவத்தை வைத்து ஸ்தாபிக்கப் பட்ட வாதங்கள், கொள்கைகள், அனுமாங்கள். ஆனால் பெண்நிலை வாதம் ஆயிரமாயிரம் பெண்களால் தேசங்களை கடந்து கண்டங்களைக் கடந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனுபவங்களை அல்லல்களை அவலங்களை அவதூறுகளை அனுபவரீதியாக உணர்ந்து அவற்றை மையமாக வைத்து எழுதப்பட்ட ஒரு வாதம். முதலாளித்துவப் பெண்ணையும் சோசலிசப் பெண்ணையும் ஒன்று சேர்க்கும் ஓர் அனுபவச் சங்கிலி பெண்நிலை வாதத்திற்கு உண்டு. முதலாளித்துவப் பெண்ணின் முதலாளித்துவத்தை வெறுக்கும் ஒரு மாக்ஸிய பெண்நிலைவாதி கட்டாயமாக அவளது பெண்மைக்கிழைக்கப்பட்ட அநீதிக்குக் கை கொடுக்கவேண்டும். முதலாளித்துவத்திற்கு எதிராகவும் அவளது பெண்மைக்கு சாதகமாகவும் இயங்குவது ஊசி மேல் நடக்கும் அனுபவத்தை ஒட்டியது. என்றாலும் தொடர்ந்து நாம் இதைச் செய்கிறோம். அந்தப் பெண்ணையும் மாக்ஸியவாதியாக மாற்றிவிட நாம் எடுக்கும் முயற்சிகள் பொதுவாக நாம் தனிப்பட்டவர்களாக எடுக்கும் முயற்சிகளாகவே இருக்கும் ஆனால்கொள்கையளவில் மாக்ஸியம் பெண்நிலை வாதத்தை உள்ளடக்கவில்லை என்று கூறுவது சரியே. அதனால் நான் மாஸியத்தை ஏற்கமாட்டேன் என்று கூறுவது அபத்தம். அப்படி நான் கூறவில்லை.

சாதிய எதிர்ப்பு, வர்க்கசமரச எதிர்ப்பு, இனத்துவேசத் தன்மை, சிங்களமேலாதிக்கம் ஆகியவற்றை நிராகரிக்கும் நாம் பல தர்மசங்கடங்களையும் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. சாதி எதிர்ப்பை நிராகரிக்கும் மேல்மட்டத்து தமிழ் பெண்கள் சிலர் பெண்நிலைவாதம் பேசுவர். பெண்ணுக்கு சகல உரிமைகளும் தரப்படவேண்டும் என்று அப்படி ஒரு பெண் கூறினால் நீ சாதித் துவேசத்தை நிலைநாட்டுபவள் ஆகவே உனக்கு பென்ணுரிமை பற்றி பேச உரிமை இல்லை உனது பென்ணுரிமை வாதத்தை நாங்கள் ஏற்கமாட்டோம் என நாம் கூறமாட்டோம். உனது பெண்ணுரிமை குரலை நாம் ஆதரிக்கிறோம் ஆனால் உனது ஏனைய கொள்கைகளுக்கு நாம் எதிரி எனத் திட்டவட்டமாகக் கூறிவிடுவோம். இதைப்போலவே இனத்துவேசம் மிகுந்த சிங்களப் பெண்களிடமிருந்து நாம் கொள்கையளவில் வேறுபட்டிருந்தாலும் கூட்டங்களில் கருத்தரங்களில் வைக்கப்படும் பெண்கள் முன்னேற்றத் திட்டங்களை நாம் பெண்ணிலைவாதிகள் என்ற ரீதியில் ஆதரிக்கவே செய்வோம் ஆண் ஆதிக்கமும் ஆண்பலாத்காரமும் தேடித் தெரிந்து பெண்களைத் தாக்குவதில்லை அவள் சமூகத்துரோகியாயிருக்கிறாள் கொலைகாரியாக இருக்கிறாள் என்று எட்டி நிற்கமாட்டாது. எல்லோரையும் சமமாகவே தாக்கும். நாம் எதிர்க்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அங்கு பெண் தனது சகல உரிமைகளையும் பெற்றுவிடுவாள் என்றால் அதையிட்டு நாமும் சந்தோசப் படுவோம். எல்லாப் பிற்பட்டோர் போராட்டங்களோடு ஒத்துழைக்கும் நாம்[எமது நிறுவனம்]ஏனைய போராட்டங்களை முன்னின்று நடத்துவோரது ஆதரவை பெண்ணியத்துக்கு இன்னும் கொள்கை ரீதியாகவும் போராட்ட ரீதியாகவும் பெறாதது நமது துர்அதிஷ்டமே! ஆண் பெண் முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மற்றப் போராட்டத்தில் இருந்து தங்களை தனிமைப்படுத்தும் பெண்ணியவாதிகளும் உளர். ஆனால் எல்லாப் போராட்டங்களையும் ஒற்றிணைக்க நினைக்கும் பெண்நிலைவாதிகளோடு இணைய ஏனைய போராட்டங்கள் பின் நிற்பதும் நாம் கண்ட அனுபவம். இப்படிக்கூறும் எனது கூற்றை சிவசேகரம் தூக்கி எறியலாம். எனது கட்டுரையில் ஏனையோரின் வாதங்கைளையும் அனுபவங்களையும் கூறி நான் எனது கருத்தாக எனது கொள்கையாக அப் பிரசுரத்தில் கூறியவற்றைத் திரும்பவும் சிவசேகரத்தின் கவனத்திக்கு கொண்டுவருவதன் மூலம் எனது வாதம் எப்படி அவர் எழுப்பிய அத்தனை கேள்விகளுக்கும் விடை அளிக்க முற்பட்டிருக்கிறார் என்பதைக் கூறி எனது கட்டுரையை முடித்துக்


**விரைவில் வெளிவருகிறது**

# *மலையகப்பரிசுக்கதைகள்*

**கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுச்**
**சிறுகதைப்போட்டி**
***மலையக எழுத்தாளர்களின் 16 சிறுகதைகள்***

"உண்ட மயக்கத்திற்கும் உறக்கத்துக்குமிடையிலான மெத்தை மிதப்புகளுக்கும், போக மறுக்கும் பொழுதைப் போக்கிக் கொள்வதற்கும் எழுதப்படும் கதைகள் இல்லை இவை.... சிறுகதை என்ற கலைவடிவத்துக்குள் ரத்தமும் சதையுமாகக் காட்டப்படும் மலையகத்து வாழ்க்கைப் பின்னங்கள்".-தெளிவத்தை ஜோசப்பின் முன்னுரையிலிருந்து

தொடர்புகளுக்கு: எச்.எச்.விக்கிரமசிங்க, 39/21 அல்விஸ் பிளேஸ், கொழும்பு-13, இலங்கை

www.tamilarangam.net

"இவை தேசங்களையும் நாடுகளையும் மொழிகளையும் பண்பாடுகளையும் கடந்த ஒரு சர்வதேசிய கருத்தியல். பெண் என்ற பெயரில் அங்கும் இங்கும் எங்கும் நடக்கலாம். ஆனால் அதன் பரிமாணங்கள் நாட்டுக்கு நாடு கலாச்சாரத்திற்கு கலாச்சாரம் மாறி கூடியும் குறைந்தும் இருக்கலாம். ஆனால் அடிப்படையில் வித்தியாசங்களோ வேறுபாடோஇல்லை.அந்த அடிப்படையை மாற்ற நாம் முயலவேண்டும். இது பெண் விடுதலையின் முக்கிய வேண்டுகோள். அந்த மாறிய மனப்பான்மை தோன்றுவதற்கு மானிடர் யாவரையும், ஆணையும் பெண்ணையும் அரசாங்கங்களையும் மடாதிபதிகளையும் சமயங்களையும் சட்டங்களையும் ஒருங்கே கூவி அழைக்கிறது பெண் விடுதலைவாதம்."

## சிவசேகரத்தின் பதில்

ஆசிரியர் அஆஇ அன்புடையீர்,

செல்வி திருச்சந்திரனுடைய அண்மைய மடலின் பிரதியை அனுப்பியமைக்கு நன்றி. அவரது முதலாம், மூன்றாம் பந்திகளில் வருவன விமர்சனத்தின் இடர்ப்பாடுகள் பற்றி எனது நூல்விமர்சனக் கட்டுரையில் எழுப்பிய அம்சங்களை உறுதிசெய்கின்றன. எனது எழுத்தில் ஆழ்ந்த அறிவுசார்ந்த புத்திஜீவித்தனம் இல்லையென்ற அவரது கருத்தை ஒரு பாராட்டாகவே கருதுகிறேன். அதற்கு அவருக்கு என் நன்றி. உண்மையில், அவரது எழுத்தில் உள்ள விஷயத்தை அலசப் புத்திஜீவித்துவம் அதிகம் அவசியமில்லை. நான் எழுப்பிய கேள்விகள் மிக எளியவை. அவற்றுக்கான பதில்களைவிட வேறென்னவோ எல்லாம் எழுதப்பட்டுள்ளன.

மாக்ஸியப் பெண்நிலைவாதம் என்று ஒன்றை அவரே சிருஷ்டித்து அது பெண்ணுரிமைப் போராட்டத்துக்குப் பகைமையானது என்று சித்தரிக்க முற்பட்டது பற்றிய என் விமர்சனத்துக்கு அவரது பதிலும் இந்த மடலும், அவரது நூல் போன்று, மாக்ஸியம் பற்றி தனக்கு உள்ளதாகப் பிரகடனம் செய்யும் அறிவைப் புலப்படுத்தவில்லை. மாக்ஸியப் பெண்ணியம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சோஷலிஸப் பெண்ணியம் என்று பின்னதை முன்னதினின்று வேறுபடுத்தி முன்னதைத் தாழ்த்திய அவரது முயற்சியை அவர் தனது மாக்ஸிய அறிவின் அடிப்படையில் இதுவரை நியாயப்படுத்தவில்லை. இங்கே ஒரு விமர்சகனுக்கு முன்னுள்ள முடிபுக்கான தெரிவுகள் இரண்டு: ஒன்று, மாக்ஸிய அணுகுமுறையிற் பெண்ணுரிமை பற்றி அறிய அவர் அக்கறை காட்டத் தவறிவிட்டார்; மற்றது, அதை அவர் வேண்டுமென்றே திரித்துவிட்டார்.

மூன்றாவது பந்தியில் வரும் வரட்டு வேதாந்தம் என்ற சொற்றொடர் நான் பயன் படுத்தாதது ஒன்று. ஏட்டுச்சுரைக்காய் நிறுவனம் யாரைக் குறிக்கிறது என்பது பற்றிய தெளிவீனத்தை அப்பந்தியின் முதல் வசனத்திற் சொல்லிவிட்டுத் தன்னையும், தான் சார்ந்த நிறுவனத்தையும் அதிலுள்ள அத்தனை பேரையும் பழி சொல்வதாக மிக 'நாகரிகமான, பண்பான முறையில்' முறைப்பட்டுள்ளார். நான் குறிப்பிட்டது ஒடுக்கப்பட்ட வர்க்கச் சார்பான பெண்ணுரிமைப் போராட்டச் சக்திகளைப் பிற போராட்டச் சக்திகளினின்றும் தனிமைப் படுத்த முனையும் சக்திகளையே தான். அவை மாக்ஸியத் தொப்பி போட்டிருந்தாலும் பெண்ணியம், மரபு, விடுதலைப்போராட்டம், தேசியம், சோஷலிஸம் என்று என்ன வேடத்தில் வந்தாலும், ஈற்றில், பெண்ணுரிமைப் போராட்டத்தையும் ஒடுக்குமுறைக்கெதிரான பிற போராட்டங்களையும் பலவீனப் படுத்துவனவே. ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சார்பாகக் குரலெழுப்பும் பெண்ணியவாதிகளை ஐரோப்பாவின் புலம் பெயர்ந்த பெண்களிடையிற் கண்டுள்ளேன். இவர்களை இடையூறு செய்யும் அதி மாக்ஸியர்களையும் கண்டுள்ளேன். சுற்றாடற் சீரழிவு, இந்துமதவெறி என்பனவற்றுக் கெதிராகப் போர்க்கொடி உயர்த்தும் பெண்ணிலைவாதிகள் இந்தியாவில் எழுச்சிபெறுகின்றனர். மாறாக மேட்டுக் குடிகளின் பெண்ணியம் பேசுவோரும் அங்குள்ளனர். ஏட்டுச் சுரக்காய் நிறுவனம் என்ற தொப்பியையும், தானே உற்பத்தி செய்த பிற தொப்பிகளையும், நான் குறிப்பாக எவரையுமே சுட்டாதவிடத்து, வலிய அணிந்துகொள்ள எவரும் விரும்பினால் அது அவர்களின் சுதந்திரம். ஆசிரியை ஏட்டுச் சுரக்காய்த் தனமாக எழுதுவதாக நான் எங்கும் குறிப்பிடவில்லை. அவரது நிறுவனம் பற்றிய குறிப்பே எங்கும் வரவில்லை. இந்த விஷயம், எழுதப் பட்ட விமர்சனத்தை திசை திருப்பும் முயற்சியாகவே தென்படுகின்றது. இக்கருத்துத் தவறாக இருப்பின் அது மகிழ்ச்சிக்குரியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என் விமர்சனத்தின் மற்றொரு அம்சம் "பெண்ணிலைவாதம் மேலைத் தேயக் கோட்பாடல்ல" என்ற பிரகடனம் பற்றியது. இதை நியாயப் படுத்த முன்வைக்கப்படும் வாதம் ஒரு காலகட்டத்தின் தேவை என்று ஆசிரியை கூறுகிறார். பெண்ணியத்தை மரபு சார்ந்ததாகச் சித்தரித்து நியாயப்படுத்தும் தேவை ஒரு நூற்றாண்டு அல்ல அரை நூற்றாண்டு கூட முன்பு இருந்தாகச் சொல்லியிருப்பின் சிறிது ஏற்கக்கூடியதாயிருந்திருக்கும். மேற்கிலிருந்து எத்தனையோ விஷயங்கள் உள்வாங்கிக் கொள்ளப்பட்ட ஒரு சமுதாயச் சூழலில் பொய்மை சார்ந்த வாதங்கள் அவற்றுக்குரிய நியாயமான நிலைப்பாட்டைப் பலவீனமாக்கிவிடும் என்பதே என் கருத்து. இன்றைய பெண்ணியம் நமது மரபில் இருந்து மறைந்து போன ஒரு சிறுபான்மைப் போக்கான பெண்ணியம் சிந்தனைகளின் வரலாற்றுத் தொடர்ச்சியல்ல. அவற்றுக்கிடையிலான ஒற்றுமை மிக மேலோட்டமானது. இன்றைய பெண்ணியம் முதலாளித்துவ வர்க்க சமுதாயத்தின் முரண்பாட்டின் விளைவுகளுள் ஒன்று. முதாலாளித்துவத்தின் தொடர்ச்சியான சிந்தனைகள் பல போன்று அதுவும் மேற்கிலேயே தனது வரலாற்றுச் சித்தாந்தத் தோற்றுவாய்களையுடையது. மேலைத்தேய என்ற சொற்றொடர் உண்மையிற் பெண்ணியத்தின் சமகாலத் தன்மையைச் சரிவரப் பிரதிபலிக்க மாட்டாது. அது நவீனத்துவ சிந்தனை. பழமைவாதத்திற்குப் பகைமையான சிந்தனை.

ஆசிரியை, பெண்ணியம் கீழைத்தேயத்தில் இருந்தது எனவும் அது மரபாயிருந்தது என்று (அவர் கூறாத கருத்தைப் புகுத்தி) அதை நியாயப்படுத்துவது நேர்மைக்குப் புறம்பான வாதம் என்று நான் சொன்னதாகவும் அது மல்லுக்கட்டு, வாய்வன்முறை என்றும் ஏதோ சொல்ல முயல்கிறார். நான் மேற்கூறிய விதமாக, அவர் பெண்ணியம் கீழைத்தேய மரபாயிருந்தது என்று சொன்னதாக, எங்கே எழுதியிருந்தேன்? மரபின் அடிப்படையிற் பெண்ணியத்தை நியாயப்படுத்த முனைவது நேர்மையற்ற வாதங்கட்கே கொண்டுசெல்லும் என்று எழுதினேன். இந்தக் கருத்துக்கும் ஆசிரியையின் வியாக்கியானத்திற்கும் உள்ள இடைவெளி அதிகம். மல்லுக்கட்டு, வாய்வன்முறை போன்ற சொற்களால் அதை நிரப்பிவிட இயலாது.

'காலதேசம் கடந்ததல்ல புரட்சி' என்பது சமுதாய நடைமுறைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒவ்வாத கூற்று. ஒடுக்குமுறைக்கெதிரான புரட்சிகள் கால தேசச் சூழல்களாலேயே சாத்தியப்படுவன. இது ஒருபுறமிருக்க, மேலைத்தேய-கீழைத்தேய என்ற கோட்பாட்டைப் புகுத்துவோரை எதிர்கொள்ளும் முறை, அவர்கள் கூறுவதாக இருக்க வேண்டுமா? நம்மை வந்தடைந்த கிறிஸ்துவம் மேலைத்தேயப் பண்புடையதாகவே அறிமுகமாயிற்று. (கேரளாவின் ஸிரியக் கிறிஸ்துவம் ஒரு விலக்கு). நமது பாடசாலைக் கல்வி முறைக்கு நம் மரபில் முன்னுதாரணமில்லை. எனவே பல மேலைத்தேயக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்ட பத்தாம்பசலிகள் பெண்ணியத்தின் விஷயத்தில் அதை மேலைத் தேயக் கோட்பாடெடன நிராகரிப்பது பம்மாத்தானது என்று எதிர்கொள்ளும் போது மரபின் பேரால் ஆணாதிக்கத்தை நிலைநிறுத்தும் சக்திகளை நேரடியாகவே எதிர்கொள்கிறோம்.

நம்மிடம் தேசவழமை, கண்டியச் சட்டம் என்பன உள்ளன. ஆனால் வழக்கிலுள்ள நீதிபரிபாலன முறை, யாழ்ப்பாணம், கண்டியப் பகுதி உட்பட்டுப், பெரும் போக்காக ரோமன் டச்சுச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதே. நீதிபரிபாலன முறையின் ஒரு சிறுபகுதியே தேச வழமையும் கண்டியச் சட்டமும். இவை கூட, டச்சு, பிரித்தானிய கொலனித்துவங்கள் யாழ்ப்பாண, கண்டிய அதிகார வர்க்கத்தின் சொத்துடைமை நலன்களைப் பேணும் வசதிக்காகக் கொடுத்த சலுகைகள். (இந்திய மரபில் வந்த நீதி பரிபாலன முறைகளின் எச்சமாக உள்ளது பஞ்சாயத்து முறை. இது மேனாட்டுத் தாக்கத்தினால் உருவான ஒன்றல்ல). நமது நீதிபரிபாலன முறையும் அதன் நிர்வாகமும் மேற்கிலிருந்து அறிமுகமான விதமாகவே நிலைபெற்றுள்ளன. நம்மிடம் உள்ள முறை சாராம்சத்தில் நம் மரபு சார்ந்ததா என்பதை ஆசிரியை கருத்தில் கொண்டிருந்தால் கொஞ்சம் நிதானித்து எழுதியிருப்பார்.

ஒரு குறிப்பிட்ட மாக்ஸியக் கட்சியில் குறிப்பிட்ட சிலரது அனுபவங்களை வைத்து மாக்ஸியம் பெண்ணுரிமை பற்றி மேற்கொள்ளும் நிலைப்பாடு இன்னது என்று முடிவுகட்டுவது தவறு என்று எழுதினேன். மாக்ஸியம் வாய்ப்பாடு அல்ல. என்று அறிந்திருக்கும் ஆசிரியை, ஒரு மாக்ஸிய இயக்கத்தில் சேர்ந்ததால் ஒருவர் ஞானியாகி விடமாட்டார் என அறிந்திருக்கக்கூடும். ஆணாதிக்கச் சிந்தனை போதனை மூலம் மட்டுமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களையப்படுவதல்ல. போராட்ட நடைமுறை மூலமே ஆண்களும் பெண்களும் ஆணாதிக்கத்தின் பிடிப்பினின்று நம்மை விடுவிக்கமுடியும். நான் நிராகரித்தது குறிப்பிட்ட நபர்களின் அனுபவத்தை அல்லாது குறைபாடான அனுபவங்களின் அடிப்படையில் பொதுமையான முடிவை வந்தடைய முனையும் ஒரு அகச்சார்பான போக்கையே.

கற்பழித்தல் என்ற சொல் பெண்களை மிகவும் அவமதிப்பது. பலாத்காரப் பாலுறவை மாக்ஸியவாதிகள் அங்கீகரிக்கக் கூடும் என்ற விதமாக ஆசிரியை எழுதுவது வினோதமாக உள்ளது. தகப்பன் மகளுடன் பலாத்காரமாகப் பாலுறவு கொள்வது பொதுவாகவே கடுங்குற்றமாக ஏற்கப்பட்டுள்ளது. கணவன் விஷயத்தில் அது பற்றிய புரிந்துணர்வு போதாமலே உள்ளது. இப்பிரச்சனையும் ஆணாதிக்கத்தை நிலைநிறுத்தும் பிற பிரச்சனைகளும் கணவன்-மனைவி அடிப்படையிலான குடும்ப முறையுள் உட்பொதிந்துள்ளன. எனவே, பெண் விடுதலை, ஈற்றில், திருமணம் என்ற நிறுவனத்தின் உடைவையே நாடிநிற்கும். குழந்தைகள் பெற்றோரது உடைமைகள் அல்ல. (குழந்தைகளின் உரிமை பற்றிய கேள்வி முக்கியமானது). எனவே சமுதாயம், ஆதி மனித சமுதாயம் போன்று, கூட்டாகச் செயற்படும் தேவை உண்டாகிறது. இங்கே தனியார் உடைமையின் எவ்வாறிருக்க முடியும்? வர்ணாசிரம தர்மம் போல அடுக்கடுக்காகச், சமுதாயம் வேலைப் பிரிவுகளைக் கொண்டிருக்க முடியுமா? பெண்விடுதலை, ஒவ்வொரு வர்க்கத்தளத்திற்குள்ளும் உள்ள சமத்துவம் மட்டும் தானா? அது பெண்களிடையிலான சமத்துவமல்லவா? இவை நம்மை எங்கே இட்டுச் செல்கின்றன என நான் விளக்க அவசியமில்லை.

மாக்ஸியம் தனிமனிதரால் ஸ்தாபிக்கப்பட்ட ஒன்று என்பதே மாக்ஸியம் பற்றிய ஆசிரியையின் எண்ணமாயின் மாக்ஸியப் பெண்ணியம் பற்றி அவரது கூற்றுக்களையிட்டு நான் வியப்படையவில்லை.

'முதலாளித்துவப் பெண்' முகங்கொடுக்கும் ஆணாதிக்கமும் தொழிலாளி வர்க்கப் பெண் முகங்கொடுக்கும் ஆணாதிக்கமும் மிகவும் வேறுபட்டவை. முதலாளித்துவப் பெண் (இன்று ஏகாதிபத்தியவாதப் பெண்?) பெண்ணியக் கண்ணோக்கில் பெண் தொழிலாளியின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உரிமைகட்காகக் குரல் கொடுப்பரா? அவர் நமது ஸோஷலிஸப் பெண்ணிலைவாதிகளது முயற்சி மூலம் மாக்ஸியவாதியாகி விடவும் கூடுமா? (நமது உலகில் அற்புதங்கட்குக் குறைச்சல் ஏது!)

மாக்ஸியம் தேசியவாதத்தை அடிப்படையில் முதாலாளித்துவ வர்க்கக் கோட்பாடாகவே கருதுகிறது. அதற்காக அது தேசிய விடுதலையை நிராகரிக்கவில்லை. பெண்ணுரிமை விஷயத்தில், ஒருவர் பெண் என்ற காரணத்திற்காக மட்டுமே ஒடுக்குதலுக்கும் உரிமை மறுப்புக்கும் உள்ளாகும் போது அதை எதிர்ப்பதில் மாக்ஸியவாதி தயங்க இடமில்லை. ஒரு பெண் ஒடுக்கும் வர்க்கச் சார்பாகச் செயற்படும் போது, அவர் பெண் என்பதால் மட்டுமே அந்த ஒடுக்குமுறைச் செயலை எதிர்ப்பது எவ்வகையிலும் பெண்ணுரிமைக்கு விரோதமான செயலல்ல. பாலியல் வேறுபாட்டைவிட வேறு முரண்பாடுகள் பற்றிய கரிசனை தனக்கு இல்லை என்பதை விளக்கியதற்கு செல்வி திருச்சந்திரனுக்கு நன்றி.

ஸோஷலிஸ சமுதாயம் அமைக்கப்பட்டால் அங்கு பெண் தன் சகல உரிமையையும் பெற்றுவிடுவாள் என்று எனது கூற்றை அதன் மிகுதியினின்று தனிமைப்படுத்தியுள்ள ஆசிரியை ஸோஷலிஸம் என்று நான் கருதுவது எதை என்பதை வாசகர்களிடமிருந்து தவிர்த்து விட்டார். ஸோஷலிஸ ஆட்சி, அதாவது பாட்டாளிவர்க்க அதிகாரம், ஏற்பட்டவுடனேயே ஸோஷலிஸம் வந்துவிடாது, ஸோஷலிஸம் முழுமை பெற நீண்ட தொடரான போராட்டங்கள் அவசியம், ஸோஷலிஸம் வரும்வரை ஒடுக்குமுறைக்கு எதிரான பிற போராட்டங்கள் காத்திருக்க அவசியமில்லை, என்றவாறாக நான் எழுதியவை நிச்சயமாக ஆசிரியை தனது கூற்றுக்களை நியாயப்படுத்த உதவமாட்டா.

எனது வாதப் பிரதிவாதங்களை எடுத்து ஆராய ஆசிரியைக்கு நேரம் இல்லை என்பது ஒரு பிரச்சனைதான். ஆனால் மாக்ஸியப் பெண்ணியம் பற்றிய கேள்வி தட்டிக் கழிக்க முடியாத ஒன்று. நேரம் இருக்கிற எவராவது அதைச் செய்வது நல்லது.

அன்புடன்
சி. சிவசேகரம்

www.tamilarangam.net

அஆஇ

a aa i

அஆஇவின் 18வது இவ்விதழ் மிகத்தாமதமாகவே வெளிவந்திருக்கிறது. எல்லாச் சிறுசஞ்சிகைகளுக்கும் வந்தடைகின்ற தடைகள் எம்மையும் பல்வேறு விதமாக தாக்குகின்றன. ஆயினும் அஆஇ தொடர்ந்து வெளிவரவேண்டும் என்ற எமது எண்ணத்துடனும், பல வாசகர்கள், எழுதுபவர்கள் தந்த ஆதரவுகளுடனும் இச்சஞ்சிகையை இதுவரை கொண்டுவந்திருக்கிறோம். இன்றும் அஆஇ போன்ற சஞ்சிகைகளுக்கான தேவைகள் இருந்து கொண்டுதான் இருக்கிறது. எமக்கு வருகின்ற கடிதங்களும் நேரடியான, மறைமுகமான ஆதரவுகளும் அஆஇ தொடர்ந்து வெளிவரவேண்டும் என்றே எம்மைத் தூண்டுகின்றன. அதற்கும் மேலாக எம்மீது பேசப்படுகின்ற அவதூறுகளும், கேலிகளும் எம்மை மேலும் உற்சாகப்படுத்துகின்றன. இவ்வருடத்துக்கான அடுத்த இரண்டு இதழ்களுக்கான தயாரிப்புகளில் நாம் தொடர்ந்து ஈடுபட்டுள்ளோம். உங்களது ஆக்கங்களையும் கடிதங்களையும் தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர் குழு

அஆஇ

a aa i

காலாண்டு இதழ்

ஆவணி 1994

வெளியீடு

இலங்கைக் கலாச்சாரக் குழு

A AA IE

Post bus 85326

3508 AH Utrecht

Nederland

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாம்பு நரம்பு மனிதன்

சோலைக்கிளி

வலி தாங்கமுடியவில்லை.
எனது கண்களை யாரோ ஒரு கல்லில் வைத்து
இன்னுமொரு கல்லால்
தட்டுகின்றனர்.

என் கண்
ஒவ்வொரு நாளுமே கெடுகிறது.
அது இருந்த இடத்தில்
பாம்புகள் நுழைகின்றன
எனக்குள்.

ஆம், என் நரம்புகளெல்லாம் இப்போது பாம்புகளா!
ஒவ்வொரு நரம்பும்
ஊர்வதைப்போலவும்,
நெஞ்சைக்
கொத்துதல் மாதிரியும்,
உணர்கிறேன்.

ஊரே நான் பார்க்கும் உலகே
என் கண் தட்டும் மனிதனை
விழுங்கு!
கையிலொரு பூவோடு
பிறர் நெச்சை
தடவிச் சுகங்கொடுக்கும் மானிடராய்
மண்ணில் பிறக்க
தவம் செய்!

ஒரு நரம்பு
இப்போது
என் மூளையைக் கொத்துகிறது!
இன்று காலையில்தான் இந்தப் பாம்பு
எனக்குள்ளே வந்தது.
நேற்று முன்தினம் இரு தாப்பிலும்
சுமார் நூறுபேர்வரை மரணம் என்ற
பத்திரிகைச் செய்தியைப் பார்க்கையில்,
யாரோ என் கண்ணை
கல்லால் தட்ட
நுழைந்தது.